SWATHANTRA SANGU Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு

வாரப் பதிப்பு

ஆண்டாள்
(சுத்தானந்த பாரதி)

— 1933 —

ஹங்கேரியின்
பாரதி

சிலுவையில் மாண்ட இயேசு

'உடையார் முன் உடைந்ததே'
(ஸ்ரீ உ. வே. சுவாமினாதய்யர்)

மகாராஜபுரம் விசுவனாதய்யர்
(ஸ்ரீ ஈ. கிருஷ்ணய்யர்)

ஒரு
ஜோடி காளை
(கி. ஜ. ர.)

பட்டக் குதிரை
சவாரி (படம்)

அதிருஷ்டம்
(திப்பு)

மஞ்சள் செய்த
கலாட்டா

புத்தகம் 4. மார்கழி 15 (29-12-33) வெள்ளி இதழ் 5

ஆண்டாள்

(ஸ்வாமி சுத்தானந்த பாரதியார் எழுதியது)

கணவனாக எம்பெருமானை யெண்ணி விரகங் கொண்டு உருகியவரில் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள் முதன்மையானவர். இவர் துளசி வனத்தினின்று விஷ்ணு சித்தர் என்ற பெரியாழ்வாரால் கண்டெடுத்து வளர்க்கப் பெற்றார். நாடோறும் பெரியாழ்வார் திருமாலுக்குத் தொடுத்து வைத்திருக்கும் மாலையைத் தொடுத்ததும் ஆழ்வார் அப்புறம் போயிருக்கும்போது, தான் அணிந்து அழகு பார்த்துக்கொண்டே வந்தார். இதை அறியாத விஷ்ணுசித்தன் அம்மாலையைத் தினந் தோறும் திருமாலுக்குச் சாற்றி வந்தார். ஆயினும் ஒரு நாள் ஆண்டாளின் செயலைக் கண்டு திடுக்கிட்டு அபசாரம் வந்தது என்று கவலையுற்றார். அன்று கனவில் பெருமாள் தோன்றி "அன்ப, பச்சையான ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலையே எனக்கு இனிது" என்றதும், அவ்வாறே ஆண்டாள் சூடியதை ஆண்டவனுக்குப் போட்டு மகிழ்ந்தார். தான் ஈசனையே மணாளனாக எண்ணி 'நான் அவனுடைய அழகிற்கு ஒத்திருக்கிறேனோ ஒவ்வாதிருக்கிறேனோ' என்று மாலை சூடித் தன்னையே கண்ணாடியிற் கண்டு சோதித்துக் கொள்வாளாம் ஆண்டாள். ஈசனுடைய திருவடிவிற் கேற்றபடி தானும் மனதடலில் அழகு நிரப்பியிருக்க வேண்டுமென்று எண்ணினாள். இப்படி யெண்ணி யெண்ணி, அண்ட நாயகன் மீது அடங்காக் காதல் பூண்டாள். ஆண்டாளுக்கு மணப்பருவம் வந்தது. தான் ஸ்ரீரங்க நாதரையே மணந்துகொள்ளப் போவதாகக் கூறினாள். கனவிலும் நினைவிலும் அவர் திருவுருவையே கண்டாள். தான் குளிக்கக் காலை எழும்போதெல்லாம் தான் நந்த கோகுலத்தில் கோபியருடன் இருப்பதாக எண்ணி, 'சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்! ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம், கார் மேனிச் செங்கண், கதிர் மதியம் போல் முகத்தான், நாராயணனே நமக்கே பறை தருவான்! பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்' என்று உள்ளங் கசிந்துருகப் பாடுவாள். 'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்னோடு உற்றோமே யாவோ முனக்கே நாமாட் செய்வோம். மற்றை நம் காமங்கள் மாற்றேலோ ரெம் பாவாய்!' என்று கண்ணன் திருப்பணிக்கே தன்னை யீந்து மகிழ்வாள். அவனுக்கே ஆட்செய்த தெய்வப் பெண்டிர் உதித்த தமிழ் நாடே! தற்போது உன் பெண்டிருள் ஒரு தேசப்பணி செய்யும் ஆண்டாள் இல்லையோ!

இப்படி அணி அரங்கத் தம்மானுக்கே தீர்ந்த காதலுடைய ஆண்டாள் "ஏ நாரணனே! உன்னை மாமி தன் மகனாகப் பெற்றால் எமக்கு வாதை தவிருமே! எங்கள் சிற்றில் வந்து சிதையேலே!" என்பாள்.

"கூட்டிலிருந்து கிளியெப் போதும்
கோவிந்தா! கோவிந்தா என்றழைக்கும்
ஊட்டக் கொடாது செறுப்பனாகில்
உலகளந்தா னென்றுயரக் கூவும்
நாட்டில் தலைப்பழி யெய்தி யுங்கள்
நன்மை யிழந்து தலை யிடாதே
சூட்டியர் மாடங்கள் சூழ்ந்து தோன்றும்
துவராபதிக் கென்னை யுய்த்திடுமின்"

என்று இந்த ஊன் கூட்டில் அடைபட்ட அவள் ஜீவாத்மாவான கிளி பரமாத்மாவாகிய அரங்கனை யடைய ஆத்திரப் படுவதைப் பார்மின்! ஏ தமிழ் நாடே! சுதந்திர மடைதற்கு உன் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் இவ்வித ஆத்திரத்தை யூட்டுவாயாக! சோறாட்டும் போதும் 'சுதந்திர தேவீ!' என்று கூவ, மக்களின் வீராவேசத்தைப் பெருக்குவாயாக! 'எனது ஆராவமுதன் வாயிலூறிய நீர்தான் கொணர்ந்து புலராமே பருகி இளைப்பு நீக்கீர்' என்று அனைவரிடமும், உரைக்கும் ஆண்டாளின் அன்பை ஐயன் அகங்குளிர அறிந்தான். கனவில் தன்னோடு மணக்கும் கோலத்தை வெளியிட்டான். ஆண்டாள் கனவில் அரங்கநாதன் தன் கரத்தைப் பிடித்துத் தீயை வலம் வந்து மணக்கக் கண்டு,

"மத்தளம் கொட்ட, வரிசங்கம் நின்றூத,
முத்துடைத்தாமம் நிரை தாழ்ந்த பந்தற் கீழ்,
மைத்துனன்நம்பி மதுசூதன்வந்து என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழீ நான்"

என்று தான் கொண்ட மணக்கோலத்தைப் பலவிதமாகத் தன் தோழிகளிடம் சொல்லுவாள். இந்த ஒப்பற்ற அன்பை உளத்துட் கொண்டு அழகிய மணவாளர், பெரியாழ்வார் கனவில், "நாம் ஆண்டாளை நாளையே மணப்போம்" என்று தன் கோவிற் சேவகர் மூலம் ஆண்டாளை அழைத்துவர முத்துப் பல்லக்கும் விருதுகளும் மேளதாளங்களும் விடுத்தார். ஆண்டாள் அரங்கன் சந்நிதி சேர்ந்தாள். அரவணை மீது துயிலும் செல்வனுக்கு நாயகியாக அவன் பக்கம் சென்றாள். ஒரு ஜோதி தோன்றியது. நாதன் இவ் வன்புருவைத் தன் அருள் ஒளிக்குள் கரையச் செய்தான். என்னே ஆண்டாளின் பக்தி! ஆண்டாள் உதித்த தமிழ் நாட்டுப் பெண்களே உங்களுக்குச் சுதந்திரம் பெற இத் தகைய தாகம் உண்டாகட்டும்!

சுதந்திரச்சங்கு

" சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லா மேத்தோதுவோமே "

போன் நெ. 8088

ஆசிரியர் : சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

Vol. IV.] மார்கழி மீ 15உ வெள்ளிக்கிழமை (29—12—1933) [No. 5

புனித நாட்கள்

அந்த மூன்று நாட்களும் சென்னை நகரம் ஆனந்தத்தில் மூழ்கியிருந்தது. சோர்ந்து கிடந்த பாரத நாட்டில் ஓர் வீர ஜாதியையே சிருட்டித்துள்ள மாபெருந்தலைவன், சோம்பிக் கிடந்த ஹிந்து மக்களிடையே சேவைப் புத்தியை உண்டாக்கியுள்ள அருட்குமாரன் விஜயம் செய்திருந்தானெனில், நகரின் ஆனந்தத்துக்கு அளவுண்டோ? உணர்ச்சிக்கு எல்லையுண்டோ? அண்ணலைத் தரிசிப்பதற்காக மாகாணத்தின் பல பாகங்களினின்று கூட மாந்தர் வந்திருந்தனர். தேச சேவைக்காக உயிரையே அர்ப்பணித்து விட்டு உலவும் அந்தத் திருவுடலைத் தரிசிப்பதற்கு மக்களுக்கிருந்த ஆவலை என்னென்று கூறுவது !

ஸ்டேஷனில் வந்திறங்குகிறாரென்றால், அங்கு லட்சம் ஜனம் ; சுதேசிக் கண் காட்சியைத் திறக்கிறாரென்றால் அங்கு பல்லாயிரம் ஜனம் ; சிறியதொரு சேரிக்கு விஜயம் செய்கிறாரென்றால் அங்குகூட எதிர்பாராத விதமாக ஆயிரக்கணக்கான பேர். இவ்வாறாகச் சென்னை முற்றிலும் மூன்று நாள் திருவிழாவாகவே இருந்தது.

அய்யனிடம் இந்த நாட்டு மக்களுக்கு எத்துணைப் பக்தி இருக்கிறதென்பதற்கு இதைவிட என்ன அத்தாட்சி வேண்டும்? இந்தச் சென்னை விஜயம் அரசாங்கத்தின் கண்களைக் கொஞ்சமாவது திறந்திருக்குமா? ஹிந்து சமூகத்தைக் காப்பாற்ற வந்திருக்கும் அண்ணலின் அன்புச் செய்தியை அறியாதிலவும் 'ஸனாதன' சகோதரர்கள் இனியாவது உண்மையை அறிவார்களா? 'இந்தியா காந்தியாகி விட்டது' என்று கூறிய அமெரிக்க நண்பரின் சொற்களை, சென்னை விஜயம் தெளிவாக்கிற்று.

மூன்றே தினங்களுக்குள் மூன்று மாத அலுவல்களை அய்யன் செய்து திரும்பிச் சென்றார். ஐம்பதுக்கு மேற்பட்ட இடங்களுக்கு விஜயம் செய்திருக்கின்றார். நூற்றுக்கணக்கான தலைவர்களோடு பேசியிருக்கிறார். மெயில் பத்திரிகை ஆசிரியர் ஹெயில்ஸ் துரை போன்ற எவ்வளவோ ஐரோப்பிய கனவான்கள், மூடப்பிடிவாத முடைய ஸனாதனிகள், ஐயம் தீர்த்துக் கொள்ள வந்த ஹரிஜனத் தலைவர்கள் இப்படிப் பல அபிப்பிராயங்களை யுடையவர்களையும் காந்திஜி தன் வசமாக்கிவிட்டார். இதைத் 'திக்விஜயம்' என்று சொல்லாது வேறென்னவென்று சொல்வது !

சென்னைக் கார்ப்பொரேஷன், முதல் சென்னை ஸ்திரீகள் சங்கம்வரை நூற்றுக் கணக்கான சபைகளும் சங்கங்களும் அய்யனுக்கு வரவேற்புப் பத்திரமளித்து உபசரித்தன. இவ்வளவு அலுவல்களிடையே காந்திஜீ அருள் சுரந்து நமது 'சங்கு' காரியாலயத்துக்கும் விஜயம் செய்தார். அது நிமித்தமாக, சென்ற வாரச் சங்கு இதழும் நிறுத்தப்பட்டது. நமது காரியாலய ஊழியரனைவரும் சேர்ந்து அடியிற் கண்ட வரவேற்புப் பத்திரத்தை மகாத்மாவுக்கு அளித்தனர்.

" மகாத்மா காந்திஜீ !

எங்கள் மனப்பூர்வமான நமஸ்காரம்.

தங்கள் ஆசியும் ஆதரவும் பெற்று, தங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கும் "சுதந்திரச் சங்கு" ஸ்தாபனத்தைச் சேர்ந்த எங்களுக்கு, தங்களைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்ததை, அளவிலா மகிழ்ச்சி தருகிறது.

இந்த சந்தர்ப்பத்தில் எங்கள் மனமார்ந்த அன்பையும் வணக்கத்தையும் தங்களுக்குச் செலுத்திக் கொள்ளுகிறோம்.

எங்கள் வாழ்க்கையில் தங்கள் உபதேசங்களைக் கடைப்பிடித்து நடக்க, வேண்டிய மன உறுதியையும் ஊக்கத்தையும் ஈசன் எங்களுக்கு அருள்புரியுமாறு பிரார்த்திக்கிறோம்."

ஹரிஜன நிதிக்காக ஓர் சிறு பண முடிப்பும் அளிக்கப்பட்டது. மகாத்மா அன்று தந்த ஆசி நம்மை என்றென்றும் காக்குமன்றோ !

மகாத்மாவின் சென்னை விஜயத்தினின்று தென்னாட்டு மக்கள் அறிய வேண்டிய விஷயங்கள் சில உண்டு. ஜனவரி மாதக் கடைசியில் மகாத்மா தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்யப் போகிறார். ஆங்காங்கு லட்சக் கணக்கான மக்கள் அவரைத் தரிசிப்பதற்காகக் கூடப் போகின்றனர். அத்தகைய கூட்டங்களுக்கு வருபவர் ஒவ்வொருவரும் தம்மை ஓர் தொண்டராக நினைத்துக்கொண்டு அமைதி காக்க வேண்டும். பெரிய ஊர்களில் ஸ்திரீகளுக்காகப் பிரத்தியேகமான பொதுக் கூட்டங்களை நடத்துவதே நல்லது.

இந்தச் சென்னை விஜயத்தில் சுமார் நாலு லட்சம் மக்களாவது மகாத்மாவைத் தரிசித்திருப்பார்கள். ஆனால் சேவா நிதிக்கு ஏதோ சில ஆயிரம் ரூபாய்கள் தான் சேர்ந்தன. தரிசனம் செய்வதுமட்டும் போதுமா? மகாத்மா எடுத்துக் கொண்டுள்ள மகத்தான சேவைக்கு அவரவர்களாலான உதவி செய்யவேண்டுவது அவசியமன்றோ! தமிழ் நாட்டின் இதர நகரங்கள் இந்த விஷயத்தில் இப்பொழுதிருந்தே சிரத்தை காட்டவேண்டும்.

நிதி வசூலிக்கும் விஷயத்தில் தம்மை ஒரு ‘பனியா’ என்று காந்திஜீயே சொல்லிக்கொள்வது வழக்கம். அன்பர்கள் உவந்து அளித்த ஒரு பவுண்டன் பேனாவையோ, ஒரு வளையலையோ காந்திஜீ ஏலம் கூறும்போது, அந்தக் காட்சி எல்லோருக்கும் இன்பமளிப்பதாகும். இந்தத் தடவை காந்திஜீ சில கூட்டங்களில் தமிழ் பேசியது அனைவருக்கும் ஆச்சரியமளித்தது.

“ஒரு தரம்! இரண்டு தரம்! போனால் வராது!” என்று சிரித்துக் கொண்டே அவர் பேசிய சொற்களும், “திக்கற்றவருக்குத் தெய்வமே துணை” என்று அவர் எடுத்துக்கூறிய தமிழ்ப் பழமொழியும் தமிழரின் உள்ளத்தையே அள்ளுபவை. காந்திஜீ தமிழகத்துக்கு வரும்போது அவரை இன்னும் பல மடங்கு உத்ஸாகத்தோடும் கட்டுப்பாட்டோடும் தமிழர் வரவேற்பாராக!

சிலுவையில் மாண்ட இயேசு

மகான் இயேசு கீழ் நாட்டிலேயே அவதரித்தார். அவரது அரிய உபதேசங்களை, மேல் நாட்டவரைவிடக் கீழ் நாட்டவரே அதிகமாக அறிந்திருத்தல் வேண்டும். அவர் திபேத்துக்கும் இந்தியாவுக்கும்கூட விஜயம் செய்ததாக ஆராய்ச்சிக்காரர் ஊகிக்கின்றார்கள்.

இயேசு கிறிஸ்துவின் மதத்தைத் தாங்கள் பின்பற்றுவதாக மேல் நாட்டவர் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால், அன்று இயேசுவைச் சிலுவையிலறைந்து கொன்றவர் மேல் நாட்டவராகிய ரோமாபுரியினர்தான். இன்று அவரது உபதேசங்களையெல்லாம் புறக்கணித்து வாழ்பவரும் அதே மேல் நாட்டினர்தான்.

ஜனங்கள் ஏசு பெருமானின் ஒளி பெற்ற உபதேசங்களைக் கேட்டு, அதிகாரிகள், மத குருக்கள் ஆகியவர் அக்கிரமங்களை எதிர்க்கும் வலிமை பெறலாயினர். இதைக் கண்டு அவர்கள் பீதியடைந்து, பிலாத்து என்னும் பெரிய அதிகாரியிடம் முறையிட்டு, ஏசுவைச் சிலுவையிலறைந்து கொல்ல வேண்டுமென்று மன்றாடினர். தனக்கு மனமில்லாவிட்டாலும், அவர்கள் குரூரப் பிடிவாதத்திற்கு அந்த அதிகாரி இணங்க வேண்டியதாயிற்று.

கடைசியில் அந்த அன்பின் வடிவத்தை, அருள் மூர்த்தியை, சிலுவையில் அறைந்து விட்டார்கள். அங்கமெல்லாம் நொந்து வேதனைப்படும் அந்த வேளையிலும், ஐயன் ஏசுவின் முகத்திலே தெய்வ களை ஜொலித்தது. “பிதாவே! ஆண்டவனே! தாங்கள் செய்வது இன்னதென இவர்களுக்குத் தெரியவில்லை. இவர்களை மன்னியுங்கள்” என்று பிரார்த்தித்தார்.

இயேசு மறைந்துவிட்டார். ஆனால் அவர் சக்தி, அவர் உபதேசித்த தத்துவங்கள் இன்று உலகெலாம் பரந்துவிட்டன. ஏறக்குறைய 2,000 ஆண்டுகள் கழிந்தபின், இன்று இயேசுவின் நாமம் உலகெங்கும் துதிக்கப்படுகிறது. “அன்பே மோட்சத்திற்கு வழி” என்பதே அவர் உபதேசங்களின் திரண்ட சாரம். குழந்தைகளையும், எளியவரையும் அவர் நேசித்தார். பாவிகளை அன்புப் பாசத்தால் மனந் திரும்பச் செய்வதே அவர் ஆசை. உலகம் வெறுமையே அவர் பெயரை உச்சரிப்பதை விட்டு, அவருடைய அரிய உபதேசங்களைக் கடைப்பிடித்து நடப்பதாக!

1933

இருளில் பிறந்தது 1933. இந்திய அரசியல் வானத்தை மூடியிருந்த மேகத்திரள் கலையவில்லை. சத்தியாக்கிரகப் போராட்டத்தின் அதிர்ச்சி இன்னும் கேட்டுக் கொண்டேயிருக்கிறது. சிறைப்பட்ட அரசியல் காந்திஜீயை இன்னும் பாரத அன்னை திரும்பப் பெறவில்லை. அந்த மகாத்மா இன்னும் சிறைக்குள் தான் இருக்கிறார். கல்லாலும் சுண்ணாம்பாலும் கட்டப்பட்ட சிறையல்ல அது என்பது உண்மைதான். ஆனால், சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு, தாமாக விதித்துக் கொண்ட சிறையில் அவர் இன்னும் இருந்து வருகிறார். ஹரிஜனங்களின் துணைவரான காந்திதான் நம்மிடையே நடமாடுகிறார். அவர் அரசியல் காந்தியல்ல; அரசியலைப் பற்றி வாய் திறப்பதில்லை.

வெள்ளை அறிக்கை யென்ற மாயா ஜாலக் கடிதத்தை பிரிட்டிஷ் சர்க்கார் வெளியிட்டுத் தளுக்கிக் குலுக்கி மயக்கியது இந்த 1933-ல் தான்.

மிதவாதக் கும்பல் மறுபடியும் லண்டனுக்கு ஓடி, லட்சியம் செய்வாரற்று, அவமதிப் படைந்து, வெறுங் கையுடன் பழயபடியும் திரும்பி வந்தது இந்த 1933-ல் தான்.

போகும் தங்கத்தைப் போக விட்டுக்கொண்டு, ஏழைகளை எழாமல் அமுக்கும் 18 பென்ஸ் விகிதத்தைப் பின்னும் நிலை நாட்டி, லண்டன் முதலாளிகள் தூண்டுதலின்படி தயாரான சேம நிதி மசோதாவுக்கு, தலையாட்டித் தம்பிரான்கள் அடங்கிய இந்தியச் சட்ட சபை ஒப்பம் வைத்தது இந்த 1933-ல் தான்.

இத்தனைக்கு மிடையே ஒரே ஒரு ஒளிக்கிரணம். அதுதான் ஐயன் காந்தியின் ஹரிஜன சேவை. அது மட்டில், வர வர விருத்தி யடைந்து வருகிறது.

இப் பேர்ப்பட்ட 1933-ஞு போய் விட்டது. 1934 - நெருங்கி விட்டது. ஹரிஜன சேவையிலே வீசும் ஜோதி, அரசியலிலும் இப் புது வருஷத்தில் வீச வேண்டுமென்பது தேசத்தின் பேரவா. 1933-ம் ஆண்டே! உன்னோடு கூடியிருந்த இருளையெல்லாம் திரட்டிக்கொண்டு ஒழிவாயாக; புதிய ஒளியையும், புதிய திறலையும் வருகின்ற ஆண்டு எங்களுக்கு நல்குவதாக!

ஆச்சரியகரமான அற்பத்தனம்

ஸ்ரீ சென்குப்தாவின் சடலம் சுடலையில் வைக்கப்பட்டிருந்தது. சென்குப்தா கல்கத்தாக் கார்ப்போரேஷன் மேயராயிருந்தவர். ஆகவே காலஞ்சென்ற தலைவனுக்குக் கல்கத்தாக் கார்ப்போரேஷன் மரியாதை செலுத்தக் கடமைப்பட்டது. இரண்டு மாலைகளை வாங்கி, தலைவன் சடலத்தின்மீது போட்டார்கள். மாலைவாங்கின செலவு 30 ரூபா கார்ப்போரேஷன் கணக்கில் எழுதப்பட்டது. அந்தக் கணக்கை மேற்பார்வையிட்ட சர்க்கார் ஆடிட்டர், ‘இந்தச் செலவினம் அனாவசியம்’ என்று குறிப்பு எழுதியிருக்கிறாராம். என்ன அற்பத்தனமான குறிப்பு! இப்படி ஒரு சில்லறை உத்யோகஸ்தன் எழுதும்படி அவ்வளவு அடிமை நிலைமைக்குத் தேசம் வந்துவிட்டதா என்று அங்கலாய்க்க வேண்டியிருக்கிறது.

நமது “எலிக் குஞ்சுகள்”

“என்ன, சிங்கத்தை வந்து எலிக்குஞ்சுகள் துரத்துகின்றனவே, இதென்ன அதிசயம்!” என்றானாம் கர்வம் கொண்ட சர்ச்சில். பிரிட்டன் ஒரு சிங்கமாம். இங்கிருந்து வட்டமேஜை மகாநாட்டுக்குச் சென்ற பிரதிநிதிகள் “எலிக்குஞ்சுக”ளாம். இது சர்ச்சில் கொடுத்த பட்டம். அருமையான பட்டம்! நமது மிதவாத எலிக்குஞ்சுகள் துரத்தினவாம்; சிங்கம் ஓடிற்றாம்! உண்மையில் சிங்கம் ஓடவில்லை; எலிக்குஞ்சுகள்தான் ஓடிவந்துவிட்டன. இந்த எலிக்குஞ்சுகளை “ஒரே நசுக்காய் நசுக்கியிருக்கவேண்டும்” என்பது சர்ச்சிலின் ஆசைபோலிருக்கிறது. ஆனால், இந்த எலிக்குஞ்சுகளைப்பற்றி, இந்தியாவிலும் கவலைப்படுவோர் ரொம்பப் பேர் கிடையாது என்பதைச் சர்ச்சில் துரைமகன் அறியாததுதான் விந்தை. என்னமாயிருந்தாலும் சரி, ஏதோ தன் கையில்கிடைத்த “எலிக்குஞ்சுகள்” என்ற திருநாமத்தை நமது லண்டன் மோகிகளுக்குச் சூட்டியதற்காக, சர்ச்சிலுக்கு நாம் வந்தனம் செலுத்த வேண்டியதுதான். அதில் மாத்திரம் நமக்கு ஆட்சேபனை கிடையாது.

ஷூஸ்டர் தொண்டர் சபை

டெல்லிச் சட்டசபையின் சந்தத்தைப் பற்றி ஆர். எஸ். சர்மா என்பவர் அழுதிருக்கின்றார். “ஐயா! இந்த ஸர் ஜார்ஜ் ஷூஸ்டர், நாளையதினம் இங்குள்ள அங்கத்தினர்களெல்லாம் தற்கொலை செய்து கொள்ள வேண்டுமென ஓர் தீர்மானம் கொண்டுவருவாரானால் அத்தனை பேரும் தயங்காது வோட்டுக் கொடுத்து விடுவார்கள். ரிஸர்வ் பாங்கு மசோதாவுக்கு வோட்டுத் தந்தவர்கள் எதற்குத்தான் வோட்டுச் செய்யமாட்டார்கள்” என்பது சர்மாவின் கருத்து. ஸர் ஜார்ஜ் ஷூஸ்டர் சொன்னபடி தர்ப்பயாமி என்ற அங்கத்தினர்களையுடைய இந்தச் சபையை இந்தியச் சட்டசபை என்று பொய்ப் பேரால் அழைப்பானேன்? ‘ஷூஸ்டர் தொண்டர் சபை’ என்று அழைக்கலாமென்றே தோன்றுகிறது.

சந்யாசி சாதுர்யம்

“எனக்கெதற்கு காசு! நான் காசையே கையால் தொடமாட்டேன் ஆனால் உங்களுக்கு நன்மை வேண்டுமாயின் உங்கள் கையாலேயே இந்த உண்டியில் ஏதாவது போட்டுச் செல்லுங்கள்” என்றானாம் ஒரு சந்யாசி. அதே மாதிரி பிரிட்டிஷ் சர்க்காரும் இப்போது ஒரு வேலை செய்யப் போகிறதாம். “இதென்ன தொந்தரவு? இந்திய இராணுவ நிர்வாகத்தை ஒரு இந்திய மந்திரியிடமே விட்டு வைக்கின்றோமே” என்று பிரிட்டிஷார் சொல்லிக் கொள்கின்றார்களாம். வெள்ளை அறிக்கையில் இது காணப்படாவிடினும் வெகு தாராளபுத்தியோடு இந்திய மந்திரியிடம் இராணுவத்தை ஒப்பிக்கப் போகின்றார்களாம். ஆனால் மந்திரி இந்தியனாயிருந்தாலென்ன, மந்திரி இல்லாமலே போனாலென்ன இரண்டும் ஒன்றுதான். இராணுவம் எப்போதும் ஒரு வெள்ளைத் தளபதியின் ஆட்சிக்குள்தானிருக்கப் போகிறது. அவன் வைஸ்ராய்க்கும், பிரிட்டிஷ் சர்க்காருக்கும் அடங்கி நடப்பானேயன்றி ‘இந்திய’ மந்திரிக்கு அவன் மீது அதிகாரமிருக்கப் போவதில்லை. அப்படிக்கு ஒரு மந்திரித்துவம் வேண்டுமா? அந்த உத்தியோகம் வரிப்பணத்திற்கு வீண் சுமையாகவே இருக்கப் போகின்றது. ஆகவே சர்க்காருடைய இந்தப் பசப்பு மொழிகளில் யார் மயங்கப் போகிறார்கள்?

‘அர்ஜண்ட்!’

லாகூர் ஜெயிலில் ஒரு கைதியைத் தூக்கிலிட்டு விட்டார்கள். அக்கைதியைத் தூக்கிலிட வேண்டாமென்ற உத்திரவு அடங்கிய கடிதம் ஆபீஸுக்கு வந்திருந்தும் அதை அந்தச் சிறை அதிகாரிகள் பிரித்துப் பார்க்கவில்லையாம். பிரித்துப் பார்க்காததற்குக் காரணம் என்ன சொல்கிறார்களென்றால், கடிதத்தின் கவரின்மேல் ‘அர்ஜெண்ட்’ என்று போடவில்லையாம்! “இனிமேல் எல்லாக் காகிதங்களின் தலையிலும் ‘அர்ஜெண்ட்’ ‘அர்ஜெண்ட்’ என்று அச்சடித்துத் தள்ள வேண்டுமோ” என்று ஓர் பத்திரிகை கேட்கின்றது. அப்போதுகூட இதே ஆபத்து நேர்ந்துவிடலாமென்றே நமக்குத் தோன்றுகிறது. எது அர்ஜண்டோ எது இல்லையோ, மிக்க அர்ஜண்டாக ஓர் மனித ஆவியை உலகத்தினின்று துரத்திவிட்டதுதான் வருந்தத் தக்க விஷயம். யாரோ இரண்டு குமாஸ்தாக்களைத்தான் சர்க்கார் இதற்காகத் தண்டிக்கப் போகிறதாம்.

அப்போதும் இப்போதும்

இந்தியா, அரேபியா முதலிய பல இடங்களினின்றும் மாணவர்கள் சென்று ரோம் நகரத்தில் ‘முஸோலினி’ தலைமையில் ஓர் மகாநாடு கூடினார்கள். ‘ஆசிய மாணவர் மகாநாடு’ என்பது அதன் பெயர். அம் மகாநாட்டில் பேசும்போது நெடுங்காலமாக, கிழக்குக்கும் மேற்குக்கும் சம்பந்தமிருந்து வருவதாக முஸோலினி கூறினார். ஆனால் 4 நூற்றாண்டுகளுக்கு முன்னே இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இருந்த சம்பந்தம் கௌரவமாயிருந்தது. ஆனால் இப்போதுள்ள சம்பந்தத்தைப்பற்றி எண்ணுவதற்கே வெட்கமாயிருக்கிறதல்லவா?

"படுதா" உத்திரவு

"முன்னே பார்த்தால் முன்சீப் குருதை; பின்னே பார்த்தால் ராவுத்தர் குருதை" என்று ஒருவன் சாட்சி சொன்னான். இதே மாதிரி சென்னை சர்க்கார் தனது அதிகாரிகளுக்கு ஓர் உத்திரவு போட்டிருக்கிறதாம். ஐயன் காந்தி சென்னைக்கு வருவது சர்க்காருக்குப் பிடிக்கவில்லை யானால், அதைப் பட்டவர்த்தனமாகச் சொல்லி இருக்கலாம். அதைவிட்டு, என்னென்னவோ ஊரை வளைத்து, தானும் தெளியமல், அதிகாரிகளும் பீதி யடையும்படி ஓர் சுற்றுத்தரவை விடுப்பானேன்?

காந்திஜீயின் ஹரிஜன சேவையும் சுதேசி இயக்கமும் சட்ட சம்மதமானவைதானாம். ஆனால், சில ஜனங்களுக்கு அவை பிடிக்காமல் கலகம் கூட நடக்கக்கூடுமாம். அப்படி நியாயமான காரியத்திற்குக் குந்தகம் நேருமானால், அதிகாரிகள் உதவியன்றோ செய்யவேண்டும். அதுதான் கூடாதாம். என்ன வேடிக்கை!

காந்திஜீ தற்காலிகமாக அரசியலினின்று ஒதுங்கி யிருக்கிறாராம். ஆயினும், சட்டமறுப்பு அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளவில்லை யென்று அவர் சொல்லி வருகிறாராம். ஆகையால், "சட்ட விரோதமான, புரட்சி விளைக்கத் தக்க ஓர் இயக்கத்திற்கு இன்னும் அவர் தலைவர்" என்று சர்க்கார் நினைத்திருக்கிறதாம். ஒருவர் மனத்திலிருக்கும் அபிப்பிராயத்தை மாற்ற மண்ணிலுள்ள எந்த சர்க்கார் தலை கீழாக நின்றாலும் ஆகிற காரியமா?

"காந்திஜீக்கு விசேஷ உதவிகள் ஒன்றும் செய்யக் கூடாது" என்று உத்தியோகஸ்தருக்குக் கட்டளை போட்டிருக்கிறதாம் சர்க்கார். "நரி வலமும் போகவேண்டாம்; இடமும் போக வேண்டாம். மேலே விழுந்து பிடுங்காமலிருந்தால் போதும்" என்ற பழமொழியை எண்ணி, நாம் சந்தோஷப் பட வேண்டியதுதான்.

ஆனால் ஏன் சர்க்கார் இப்படி அநாவசிய பீதி யடையவேண்டும் என்பது தான் நமக்கு விளங்கவில்லை. "இந்தியன் எக்ஸ்பிரஸ்" கூறுவதேபோல, உத்தியோகஸ்தர்களை எதற்காகப் படுதாப் பெண்களைப் போல் நடந்து கொள்ளச் செய்யவேண்டும்? காந்தி யென்றால், இவ்வளவு "காபுரா" ஏன்?

தீராத மோர்ப் பஞ்சம்

'ஸி' வகுப்பு ராஜீயக் கைதிகள் மோர் இல்லாததால் படும் அவஸ்தை கொஞ்ச நஞ்சமல்ல. வயிற்றுக் கடுப்பு முதலிய தொல்லைகள் ஏற்பட்டுத் தவிக்காதவர்கள் அபூர்வம். சிலர் அதினின்றும் மீளாது உயிரும் துறந்திருக்கின்றனர். "ஆற்றோடு போனாலும் போவேன்; தெப்பக்காரனுக்குப் பணம் கொடேன்" என்பது போல, என்ன மருந்துச் செலவானாலும் சரி, மோர் மாத்திரம் கொடுப்பதில்லை யென்று பிடிவாதம் செய்தது சர்க்கார். பலத்த கிளர்ச்சிக்குப் பிறகு, ஏதோ ஆலோசிப்பதாகவும் சொல்லிற்று. இப்பொழுதோ ஒரு விசித்திர உத்திரவு பிறப்பித்திருக்கிறது.

ஏராளமான மோரைச் சேகரித்து, 'ஸி' வகுப்பு அரசியல் கைதிகளுக்கு, சுகாதாரங் குறையாமல் 'சப்ளை' செய்வது சாத்தியமல்ல என்று சர்க்கார் உத்திரவு முடிவு சொல்லி விட்டது. இந்த உத்திரவைக் கண்டால், தெருவில் மோர் விற்கும் கிழவிக் கூடக் கேலி செய்து சிரிப்பாள். சில நூறு பேர்களுக்கு ஆரோக்கியமான மோர் சம்பாதிப்பது கஷ்டம் என்பது வெறும் நொண்டிச் சாக்கு. அநேக ஜெயில்களில் குடங் குடமாகக் கறக்கும் மாடுகள் இருக்கின்றன. அவைகளின் பாலைக் கறந்து மோர் செய்து கொள்ளும்படி, 'ஸி' வகுப்புக் கைதிகளுக்கே அனுமதித்தால் கூட, அவர்களே தயாரித்து விடுவார்கள். அரசியல் கைதிகளை அவதிப்படுத்த வேண்டுமென்ற ஒரே நோக்கத்தைக் கொண்டுதான் இந்த உத்திரவு பிறந்திருக்க வேண்டுமென்று நமக்குத் தோன்றுகிறது. இல்லாவிட்டால், இந்த வீண் சாக்கைச் சர்க்கார் கூறுமா?

நிலவரி வஜா

கடைசியாக, சென்னைச் சர்க்கார் சென்ற வருடம் நிலவரியில் வசூலியாமல் நிறுத்தி வைத்திருந்த ரூபாய்க்கு இரண்டணாவை வஜாவே செய்துவிட்டார்கள். ஆனால், வரும் வருஷத்திற்கு ஏதாவது வஜாச் செய்யலாமா என்பதை மட்டும் யோசித்துக் கொண்டிருக்கிறார்களாம். யோசனை ஜனவரி மாதத்துக்கு முன் முடிந்தால் தேவலை. இல்லாவிட்டால், தண்டல்காரன் நெருக்க ஆரம்பித்து விடுவானே. சர்க்கார் யோசனை சீக்கிரம் முடியுமா?

என்ன கொண்டு வருவீர்?

மிக்க கெடுபிடியாக இதுவரை அரசாட்சி புரிந்த வில்லிங்டன் பிரபுவுக்கு கொஞ்சகாலம் ஓய்வு வேண்டுமாம். நாலு மாதம் ரஜாக் காலத்துக்குள் இங்கிலாந்துக்குப் போய்வருவதென்று வில்லிங்டன் நிச்சயித்துளார். அந்தக் காலங்களில் வைஸ்ராயின் சிங்காதனம் காலியாயிருக்கலாமா? சென்னை கவர்னர் ஸ்டான்லி துரை அதில் ஏறி அமர்ந்திருப்பாராம். சென்னையின் கவர்னர் உத்தியோகம் அதிருஷ்டமுடையது போலும்! சென்னைக் கவர்னராயிருந்தவர்தானே வில்லிங்டன் பிரபுவும்! ஆனால் இதற்காக, சென்னை மாகாணம் கர்வப்படலாமா கூடாதா என்பது வேறு விஷயம்.

முன்னொருக்கால் இர்வின் பிரபு இங்கிலாந்து சென்று திரும்பி வந்த போது 'வ்ட்டமேஜை' என்ற ஓர் இந்திரஜாலப் பெட்டியைக் கொண்டுவந்து இந்திய மக்களுக்குப் பரிசளித்தார். பெட்டியைத் திறந்தால் எல்லாம் பாம்பும் பல்லியுமாய் விளைந்தது. அதே மாதிரி இப்போது வில்லிங்டன் பிரபு என்ன வஸ்துவைக் கொண்டு வந்து பரிசளிக்கப் போகின்றாரோ, யார் கண்டது? வில்லிங்டன் பிரபு போகும் போது அடக்கு முறைப் பாணங்களைத் தமது மூட்டையில் வைத்துக் கட்டிக் கொண்டு போய் விடப்போகின்றாரா வென்பதை விசாரித்த போது, இல்லை யென்று தெரிந்தது. வில்லிங்டன் பிரபுவின் ரஜாவினால் தேசத்துக்கு யாதொரு மாறுதலும் இல்லை யென்றால், அதைப் பற்றி விவரித்தென்ன பயன்?

எதிர்கால ஜோதிடம்

நீங்கள் பிறந்த நாழிகை அல்லது கடிதம் எழுதும் நேரத்தையாவது குறித்தனுப்பினால் உங்கள் எதிர்கால ஆயுள், தனம், சகோதரம், மாதுர், பிதுர், ஸந்தானம், சத்ரு, ருணம், களத்திரம், களத்திர ரூபம், பாக்கியம், ஜீவனம், தொழில் லாபம், விரையம் ஆக இத்யாதி விஷயங்க்ள் பூராவும் தெரிவிக்க ரூ. 2. ஒரு வருஷத்திற்கு மாதவாரி நடக்கும் பலன் எழுத ரூ. 2. பலன் சரியாயில்லாவிடில் பணம் வாபீஸ் செய்யப்படும்.

அருட்பிரகாசர் ஜோதிடாலயம்,

வைத்திக் குப்பம், புதுவை. (பிரஞ்சிந்தியா.)

ஒரு ஜோடி காளை

('தி. ஜ. ர.' எழுதியது.)

அந்த நூறு குழிதான் ஏழைக் காத்தானின் ஆஸ்தி. சோமுப் பிள்ளையும் ஐந்து வருஷமாக அதை எப்படியாவது வாங்கிவிட வேண்டு மென்று கஜகர்ணம் போட்டு வருகிறார். சேர்ந்தாற் போல ஒரே தாக்காகப் பத்தொன்பது மாநிலம் அவருக்கு இருக்கிறது. இந்த ஒரு மாநிலத்தையும் அதோடு கூட்டி, ஒரு வேலியாகச் செய்து விட வேண்டும் என்பதுதான் அவருடைய ஆசை. அதற்காக, நயத்தாலும் பயத்தாலும் என்னென்னவோ சொல்லிப் பார்த்தார். காத்தான் இது வரையில் மசிகிற வழியாகக் காணவில்லை.

சோமுப் பிள்ளை கிராமத்தில் வசிக்கவில்லை. பக்கத்து நகரத்தில்தான் அவர் வீடு. என்றாலும், அவருக்குக் கிராமத்தில் நல்ல செல்வாக்குண்டு. பலமான கொடுக்கல் வாங்கலுமுண்டு. ஆனாலும், யாரிடமும் அவர் குரூரமாக நடந்து கொண்டதில்லை. ஏழைக் காத்தானை அவர் பலவந்தம் செய்தால், அவன் பணிந்து போகத்தான் வேண்டும். அவருக்கு அது பிடிக்கவில்லை. கசக்கி முகரக் கூடாது என்பதே அவருடைய எண்ணம். சோனிக் காத்தானோ மகா பிடிவாதக்காரன். அதோடு என்னவோ அப்பன் பாட்டன் தேடிவைத்த சொத்தை விற்கக் கூடாது என்று அவன் சொல்லிக் கொண்டிருந்தான்.

பெரியவர் வீட்டு முகப்பில் பேச்சு வார்த்தை. 'பெரியவர்' என்றால், ஊரிலே பழமையான நாட்டாண்மை உடைய ஒருவர் வீட்டுக்கே வழங்கி வரும் பெயர். இப்பொழுது அந்த வீட்டில் யாரும் பெரியவர் கிடையாது.

பக்கத்தில் வெற்றிலைப் பெட்டி. வெற்றிலையை அதப்பிக் கொண்டே சிரித்த முகத்துடன் சோமுப் பிள்ளை கேட்கலானார் :—"என்னப்பா, காத்தான்! குருவை கண்டு முதல் எப்படி? நல்ல போடுதான்போ லிருக்கிறது."

காத்தான் முகத்தில் சிரிப்போ, துக்கமோ கிடையாது. தூணிலே சாய்ந்து கொண்டு, சில சாமியார்களைப் போலத் தலையைச் சிறிது குனிந்த வண்ணம், பதில் சொல்லுகிறான் :—"அதையேன் கேட்கிறீர்கள், அண்ணே! அந்தப் பாழாய்ப் போகிற பயலுகள் மாட்டுக்கு வைத்தியம் செய்ய வேண்டியதாய்ப் போய்விட்டது. வண்டிச்சத்த வரும்படியும் கிடையாது. பணமும் போச்சு. பயிரும் பாழாச்சு. இத்தனை இழவில் நெல்லு விலையும் விழுந்து விட்டது. பிழைப்பே திண்டாட்டத்திலிருக்கிறது."

பிள்ளைக்கே மனம் சற்று இளகி விட்டது. என்றாலும், அந்த நூறு குழியை மாத்திரம் அவர் மறக்கவில்லை.

"நீ ஒரு பைத்தியக்காரன். நான் என்னவோ உனக்குக் கெடுதல் நினைப்பதைப் போல் நீ எண்ணுவாய். அந்த நிலத்துக்கும் உனக்கும் ராசியில்லை என்று சொல்லுகிறார்கள். ஐந்து வருஷமாய் உனக்கு ஏதாவது விருத்தி ஏற்பட்டிருக்கிறதா?" என்று பரிவோடு சொன்னார் பிள்ளை.

பரம்பரைச் சொத்து. விற்க மனம் வரவில்லை. ஆனால், பிழைப்புக்கும் வழியில்லை. இந்த எல்லா எண்ணத்தையும் சேர்த்து ஒரு கதம்பமாக, என்னவோ மென்று முனகிக் கொண்டு, முன்னுக்குப் பின் சம்பந்தமில்லாமல், தனது கஷ்டத்தைச் சில வார்த்தைகளால் வெளிப்படுத்தினான் காத்தான்.

பாம்பின் கால் பாம்புக்குத் தெரியுமல்லவா? இதுதான் தருணம் என்று உணர்ந்து கொண்டார் சோமுப் பிள்ளை. "இரும்பு சூடா யிருக்கும் பொழுதே சுத்தியலைப்போடு" என்று ஆங்கிலத்திலே ஒரு பழமொழியுண்டு. பழைய யோசனையைத் திரும்பவும் சொல்லுவதால், கசப்பு அதிகரிக்கக் கூடும். புதிய யோசனை ஒன்றை விதைக்க வேண்டுமென்ற ஒரு யுக்தி அவருக்குத் திடீரென்று தோன்றிற்று.

"அது கிடக்கிறது, காத்தான்! நீ ஏன் பட்டிணத்தில் வந்து வசிக்கப்படாது?" என்று அவர் வினவினார்.

"பட்டிணத்திலா!" என்று இரைந்து, அசட்டுச் சிரிப்புடன், கேட்ட காத்தான், "என் போன்றவர்களுக்கு அங்கே ஏதாவது பிழைப்பு இருந்தால்தானே வரலாம்?" என்றான்.

"பிழைப்பு இருக்கக் கொண்டுதான் சொல்லுகிறேன்" என்ற சோமுப் பிள்ளை, சற்றுத் தாழ்ந்த குரலில், "நம்ப வீட்டுக்குக்கூட வண்டி, மாடு கன்றுகளைப் பார்த்துக் கொள்ள, ஒரு ஆள் தேவையாயிருக்கிறது. உன்போல் யோக்கியமான ஆள் வேண்டும். நீயே வந்தால் இரட்டைச் சந்தோஷம்" என்றார்.

காத்தான் சரியரனபடி அகப்பட்டுக் கொண்டான். இதுவரையில் நகர வாசத்தைப் பற்றி அவன் நினைத்ததேயில்லை. அதுவும் அது தனக்குக் கிடைக்கும் என்று அவனுக்குத் தோன்றியதே கிடையாது. ஏதோ ஊரை வளைத்துப் பதில் சொன்னான்.

"நிலபலம் இருக்கிறது ; மாடு கன்றுகள் இருக்கின்றன; வீடு இருக்கிறது. இவற்றை யெல்லாம் என்ன செய்கிறது? பட்டிணம் வரவும் ஆசைதான். இந்த வருஷம் சாப்பாட்டுக்கு வழியில்லை என்பதற்காக, இவற்றை யெல்லாம் அவந்தரையாகப் போட்டுவிட்டுப் பட்டணம் சென்றால், அடுத்த வருஷம் சொந்த ஊருக்கு வர ஆசை வந்தால்....? அவன் ஒன்றையும் மறைக்கவில்லை. வெளிவிட்டுச் சொன்னான்.

இன்றைய சம்பாஷணையை இதோடு நிறுத்தி விட்டுப் போய் விட்டார் சோமுப்பிள்ளை. இன்னும் இரண்டு மூன்று சம்பாஷணைகள் நடைபெற்றன. அதற்குள் வாய்தா நெருக்கடி, தானியப் பஞ்சம், ஊர்வரி முதலிய நிர்ப்பந்தங்களும் அவன் மனத்தைத் திருப்புவதற்குத் தன் தன்னலான கைங்கர்யத்தைப் புரிந்தன. பிள்ளை சொன்னது பெரிய யோசனை. அது பலித்து விட்டது. இந்தக் கிராமம்தான்

அவனுக்குச் சாசுவதமா? நிலம் கால் வட்டிக்குக்கூடக் கட்டவில்லை. பணமாய்ச் செய்தால் பிள்ளை ஒரு வட்டி தருவார். நிலம், மாடு, வீடு, வண்டி எல்லாவற்றையும் சேர்த்து வாங்கிக் கொள்ளுவதாகச் சொல்லுகிறார் பிள்ளை. ஊரில் போடுகிற விலையை விட நூறு ரூபாய் ஜாஸ்தியாகவே தர, அவர் இசைகிறார். எண்ணூறு ரூபாய் ரொக்கப் பணம், மாதம் பதினைந்து ரூபாய் சம்பளம், நகரவாசம்—இவற்றைச் சேர்ந்தாற் போல ஒரே சித்திரமாகக் கற்பனை செய்தான் காத்தான். (அவனுக்குக் கூடக் கற்பனை இருந்திருக்கிறது!) இணங்கிவிட்டான்.

* * *

"காத்தான், நீ தை மாசம் கட்டாயம் வந்துவிடு—மாட்டையும் வண்டியையும் நீ வரும்போது கொண்டுவா என்றால் கேட்கமாட்டானென்கிறாயே" என்று, சற்றுப் பரிவு, கொஞ்சம் சந்தோஷம், சிறிது விந்தை இந்த மூன்று உணர்ச்சிகளையும் திரித்த சன்னக் கயிறு போன்ற தொனியுடன், சொன்னார் சோமுப் பிள்ளை.

ஒரு ஜோடி காளைகளை இழுத்துக் கொண்டு வந்த காத்தான். "அதுவரையில் இந்தச் சனியன்களை வைத்துக் கொண்டு காப்பாற்றுவது யார்?" என்று சலிப்புடன் வண்டியில் பூட்டலானான்.

வாட்ட சாட்டமான அந்த மாடுகள், அவன் தேகத்தை நக்கிக் கொண்டே, நுகத்தடியின் கீழ்த் தலையைத் தாமாகவே மாட்டிக் கொண்டன.

"கடைமுளை கிடையாதா?" என்றார் பிள்ளை.

"சாதுவான மாடுகள், அண்ணே" என்று நகைத்துக் கொண்டே கூறினான் காத்தான்.

"நல்ல குணங்குறி யுள்ள மாடுகள் தான்" என்று தமக்குத்தாமே மெல்லக் கூறிக்கொண்டார் பிள்ளை.

வண்டியைப் பூட்டியாயிற்று.

"ஏ குட்டி! என் சும்மா நிற்கிறே? அந்தப் புல்லுக் கட்டை வண்டியில் பரப்பேன்" என்றான் காத்தான்.

காத்தான் மனைவி உளுந்தாயி, மனதுக்குள் என்னவோ முணுமுணுத்துக் கொண்டே, புல்லை வண்டியில் பரப்பினாள்.

பிள்ளைக்கு வேறே ஆள் வேண்டியதில்லை. தாம் புதிதாய் வாங்கிய வண்டியையும் மாட்டையும் தாமே ஓட்டிச் செல்லப் போவதில் பெரிய குதூகலம்.

தலைகளைக் கையில் பிடித்து, ஏறி உட்கார்ந்த பிள்ளை, "நான் மறுபடியும் அடிக்கடி வருவேன். உனக்கு ஏதாவது பணம் வேண்டுமானால், கேள். கூச்சம் வேண்டாம். தை மாதம் கட்டாயம் வந்து விடு" என்று சொல்லிவிட்டு, மாடுகளைத் தட்டிவிட்டார்.

ஊருக்கு நான்கு நாழி தூரத்துக்கு அப்புறம் சென்று பிள்ளையின் வண்டி சாரத்தியத்தை நாம் பார்ப்போம். 'சாது' மாடுகள் பல சண்டித்தனம் செய்வதைக் கண்டு, அவர் ஆத்திரம் கொண்டார். "இந்தக் காத்தான் பொய்யன்" என்று பல்லைக் கடித்தார். "பணந்தான் அவனை என்னுடைய அடிமை ஆக்கிவிட்டதே" என்று திடீரென்று ஏதோ ஓர் நினைவு குறுக்கே பாய்ந்தது.

நிர்மானுஷ்யமான பெரிய தோப்பு. வண்டி அதனை மூன்று முறை திரும்பத் திரும்பச் சக்கரவளையம் சுற்றிவிட்டது. மாடுகளுக்கு அடி மிகப்பலம். "அம்மா! அம்மா!" என்ற அவற்றின் கதறல் ஆகாயத்தை அதிரச் செய்து கொண்டிருக்கிறது. ஒரே படியாக மாடுகள் இப்பொழுது படுத்து விட்டன.

அஸ்தமித்து விட்டது. உலகத்தையே விழுங்கப்போவது போல், மழைக்கால் இறங்கி, நாலா புறமும் கறுத்துக் கவிந்து விட்டது. வண்டி இன்னும் தோப்பை விட்டு நகரவில்லை.

ஒரே இருட்டு. இடை யிடையே குமுறி இடிக்கும் மின்னல் ஒளியைத் தவிர, வேறு வெளிச்சத்துக்கு வழியே கிடையாது. "ஏழைக் காத்தான் குடும்பத்தையே அடியோடு விலைக்கு வாங்கிவிட்ட கொடுமைதான் ஒருகால் கடவுளுக்குச் சகிக்க வில்லையோ?" என்று கூட ஒரு சமயம் பிள்ளைக்குத் தோன்றியது. என்னென்னவோ நினைத்தார். ஈசுவரனைப் பிரார்த்தித்தார்.

மாடுகளைச் 'சொப்பை' தட்டிக் கொடுத்தார். மெல்ல வண்டியில் தட்டித் தடவிப் பூட்டினார். "சோ!" என்ற மழை. உடம்பெல்லாம் குளிரால் விதிர்க்கிறது. அப்படியே வண்டியில் ஏறி உட்கார்ந்தார்.

மாடுகள் இப்பொழுது சண்டிசெய்யவில்லை. சாரல் மிகப்பலம். பிள்ளையின் தேகம் விறைத்துப்போயிற்று. வண்டியில் உடம்பை முடக்கிக் கொண்டு படுத்துவிட்டார். கையிலிருந்த தலைக்கயிறு போன இடம்கூட அவருக்குத் தெரியவில்லை. மாடுகள் ஓயாமல் நடந்தன.

எந்த வயலில் சாய்கிறதோ? எந்த வாய்க்காலில் கவிழ்கிறதோ? பாதை தெரியவில்லை. ஆனால், இந்தக் கவலைப் படக்கூட அவர் மனத்திற்கு இயலவில்லை. மனமும் மரத்துவிட்டது போலும்!

* * *

ஒருமணி நேரம் கழித்த பிறகு நடந்த சம்பவம்தான் இனி நமக்குத் தேவை.

"அப்பா! என்ன மழை!—பிள்ளை இந்நேரம் ஊர் போய்ச் சேர்ந்திருப்பாரல்லவா?"

காத்தான் குடிசையில் நடக்கும் சம்பாஷணை இது.

"இன்னுமா போகாதிருக்கிறார்?—மாட்டை என்னபாடு படுத்துகிறாங்களோ!" என்று அங்கலாய்த்தான் காத்தான்.

"அட்டா! அந்தப் பிண்ணாக்கு வீணாய்ப் போகுதே. போகச்சே அதைப் போட்டு, மாட்டுக்குக் கொஞ்சம் தண்ணிதான் காட்டினீங்களா?" என்று சொன்னாள் உளுந்தாயி.

"சற்று இரு" என்று அதட்டிய காத்தான், காதில் கையை அணைத்து, ஏதோ சத்தத்தைக் கவனித்தான்.

ஆம்! "அம்மா! அம்மா!" என்ற சத்தந்தான். சத்தம் வரவர சமீபித்தது. இப்பொழுது உளுந்தாயிக்குக் கூட அது நன்றாய்க் காதில் விழுந்தது. வாசலுக்கு வந்துவிட்டது அந்தச் சத்தம்.

கதவைத் திறந்து பார்த்த அந்த ஏழைத் தம்பதிகள், தங்கள் வண்டியையும் மாட்டையும் நேரே கண்டார்கள். உள்ளே முடங்கிக்கிடந்த சோமுப் பிள்ளையையும் கண்டு பிடித்தார்கள்.

ஐயோ! அவர் விறைத்துப் போய் விட்டார்!

"அண்ணே! அண்ணே!" என்று, காத்தான், உளுந்தாயி இருவரும் சேர்ந்தாற்போலக் கூப்பிட்டார்கள்.

என்னவோ கனவு கண்டவர்போல, "என்ன! கும்பிடுறேன்—ஐயனாரே! காத்தவராயனே!—வழியை விடு. என்ன வேண்டுதலை வேணுமானாலும் செய்யறேன்" என்றார் பிள்ளை.

"அண்ணே! உங்கவீடு, அண்ணே! நான்தான் காத்தான். இறங்கி வாருங்கள்" என்றான் காத்தான்.

"காத்தானு!— காத்தான் — காத்தான்—" என்று இரண்டு மூன்று முறை உச்சரித்த பிள்ளையின் துக்கம் மென்னியை அடைத்துக் கொண்டது.

பிள்ளையைக் கைகொடுத்து உள்ளே அழைத்துச் சென்றான் காத்தான்.

கணப்புப் போடப்பட்டது. குளிர் காய்ந்தார் பிள்ளை. நல்ல ஸ்மரணை வருவதற்கு ஒருமணி நேரம் ஆயிற்று.

பிறகு, எல்லாரும் படுத்து உறங்கி விட்டார்கள். ராத்திரி பேச்சு ஒன்றும் அதிகம் நடக்கவில்லை. பிள்ளை மட்டில் இரவு முழுவதும் உறங்கவேயில்லை

மறுநாள் பொழுது விடிந்ததோ இல்லையோ, காத்தான் ஒன்றும் சொல்லாமலே வண்டியைப் பூட்டி அதன் எதிரே நின்றான்.

"வண்டி எதற்கப்பா?" என்றார் சோமுப் பிள்ளை.

"நீங்கள் இப்பொழுது போகவில்லையா? மாலையில் நேற்று மாதிரியே மழை வரக்கூடும்" என்றான் காத்தான்.

சோமுப்பிள்ளை மிக்க நிதானமாகப் பதில் சொல்லலானார் :—"காத்தான்! உண்மையாகச் சொல்லுகிறேன். உன் நிலத்தை வாங்கினேன். வீட்டை வாங்கினேன். வண்டியை வாங்கினேன். மாடுகளையும் வாங்கினேன். ஆனால், அவற்றின் மனத்தை மட்டும் விலைக்கு வாங்க முடியவில்லை. நேற்று மாலை பூராவும் அந்த ஒரு ஜோடி காளைகளுக்கும் எனக்கும் போராட்டம். சுவாமியும் அவற்றின் பக்கம் சேர்ந்துகொண்டார். நான் தோற்றுப் போனேன். இந்த எல்லா சொத்தும் உன்னுடையவைதான். அதோடு, இனி இந்த ஊரில் நீ என்னுடைய காரியஸ்தன். என்னுடைய பத்தோ மாடுகளையும் உன்னிடம்தான் ஒப்படைக்கப் போகிறேன்."

காத்தானுக்கு ஒன்றும் புரியவில்லை; "என்ன சொல்கிறீர்கள், அண்ணே!" என்று தலையைச் சொறிந்துகொண்டு நின்றான்.

ஒரு ஜோடி மாடுகளும் ஒன்றுடன் ஒன்று போட்டிபோட்டு, அவன் உடம்பைத் தங்கள் நாவினால் சுத்தம் செய்து கொண்டிருந்தன.

கதரை அணியுங்கள்



ஹங்கேரியின் பாரதி

அலெக்ஸாண்டர் பிடோவியின் வாழ்க்கை

('செண்டாமணி' எழுதியது)

தமிழ் நாட்டில் பாரதியாரை நாம் எப்படிக் கொண்டாடுகின்றோமோ அப்படி ஹங்கேரி தேசத்தில் அலெக்ஸாண்டர் பிடோவி என்பவரைக் கொண்டாடுகிறார்கள். பாரதியாரைப் போல் பிடோவியும் அற்ப ஆயுளில் காலமாகி விட்டான். சாகும்போது வயது 26 தான்; ஓலைக் குடிசையில் தான் பிடோவி பிறந்தான்; வளர்ந்தான். ஆனால் மாட மாளிகைகளிலெல்லாம் பியானோ வாத்தியங்களோடு அவனது பாட்டுக்கள் இன்று முழங்கிக் கொண்டிருக்கின்றன. பிடோவியின் தந்தைக்கோ கசாப்புக் கடைத் தொழில். ஆனால் பிறந்தது முதற்கொண்டே பிடோவிக்குத் தியாகபுத்தி, தேச பக்தி முதலிய எண்ணங்கள் எவ்வாறோ ஊறி விட்டன. தந்தையின் தொழில் மீது அவனுக்கு வெறுப்பு ஏற்பட்டு விட்டது.

சிறு வயதிலேயே வெகு அழகான பாட்டுக்களை பிடோவி இசைக்க ஆரம்பித்தான். இது அவன் தந்தைக்குப் பிடிக்கவில்லை. கவியெழுதும் பையன் உருப்பட மாட்டான் என்று அந்தத் தந்தை எண்ணுபவன். பாட்டுக்கள் பாடக் கூடாதென்று பையனை அடிக்கடி தந்தை கண்டிப்பானாம். மேதாவிகளை அருகிலிருப்போர் எப்போதும் மெச்ச மாட்டார்களன்றோ!

இந்த வீட்டுச் சச்சரவு பையனுக்கு ஏக்கத்தை உண்டாக்கவே, அவன் உடல் நலம் குன்றிற்று. ஆனால் படுக்கையில் படுத்திருக்கும்போதும அவன் வெகு அழகான புத்தகங்களைப் படித்து மூளையை விருத்தி செய்து கொண்டிருந்தான். அவனிடம் தாயார் மட்டும் கொஞ்சம் பட்சத்தோடிருந்து வந்தாள். ஒருநாள பிடோவிக்குச் சட்டைத் துணி வாங்குவதற்காக அவள் கடைக்கு அழைத்துக் கொண்டு போய் ஒரு தினிஸு வர்ணத் துணியை காட்டி "இது உனக்குப் பிடிக்கிறதா?" என்று கேட்டாளாம். "கழுதையின் தோல் மாதிரி இருக்கிறதே" என்றானும் பையன்.

வருஷா வருஷம் வேறு வேறு பள்ளிக்கூடங்களுக்கு அவன் போய்க் கொண்டிருந்தான். மகா கவி ஹொரேஸ் எழுதிய லத்தீன் கவிதை நூலைப் பையில் போட்டுக்கொண்டு பிடோவி ஜர்மன் பாஷைப் பள்ளிக்கூடத்துக்குப் போவானும்; வகுப்பிலும் பெரிய விஷமி. ஆகவே ஒரு தடவை ஒரு உபாத்தியாயர் அவனுக்குத் தண்டனை தர விரும்பினார். "அய்யா, என்னைக் கோதண்டத்தில் போடாதீர்கள். வேணுமானால் ஆயிரம் பழமொழிகளைப் பாராமல் நெட்டுருப் பண்ணி ஒப்பிக்கின்றேன்" என்றானும் பிடோவி. உபாத்தியாயரும் ஒப்புக் கொண்டார். பையனும் மறுநாள் ஒப்பித்து விட்டானும்.

எட்டைய புரத்தில் பாரதியார் அடிக்கடி தெருக் கூத்துக்களுக்குப் போய்க் கண் விழிப்பாராம். மறுநாள் தந்தையாரிடம் வசவு வாங்குவாராம். அதே மாதிரி ஹங்கேரி தேசத்திலே பிறந்த இந்த பிடோவிக்கு நாடகம் பார்க்க வேண்டுமென்று ஆசை யேற்பட்டதாம். ஒரு நாள் தகப்பனார் நாடகக் கொட்டகை யண்டை பிடோவியைக் கண்டு விட்டதால் பிடோவியைத் தெரு முழுதும் நையப் புடைத்துக் கொண்டே போனாராம். ஆனால் காயம் ஆறியதோடு அடிகளையும பிடோவி மறந்து விட்டான். மறுபடியும் நாடக நூல்களை அவன் படிக்கத் தொடங்கவே, தகப்பனார் அவனை வீட்டைவிட்டு விரட்டி விட்டார். படிப்பும் அதோடு முடிந்தது. பிதிரார்ஜித சொத்தும் இல்லை யென்பது நிச்சயமாகி விட்டது.

வயிற்றுக்குச் சோறு வேண்டும்; சோற்றுக்குக் காசுவேண்டும்; காசுக்கு

வேலை வேண்டும். வேலையோ எங்கும் கிடைக்கவில்லை. வேறு வேலை கிடைக்காத காரணத்தினால் பிடோவி இராணுவத்தில் சேரவேண்டியதாயிற்று. அவனுடைய தேக நிலைக்கு இராணுவ வாழ்க்கை ஒத்துக் கொள்ளுமா? ஆகவே அவன் நோய்வாய்ப் பட்டான். அப்படி ஆஸ்பத்திரியில் கிடக்கும் போது அவன் பாடிய பாட்டுக்கள் அநேகம். தாயாருக்கு அவன் எழுதிய ஓர் சீட்டுக் கவியில், “எனக்குச் சோற்றுக்குக் குறைவில்லை. அதிருஷ்டம் இருக்கிறது. ஆனால் ஹிருதயத்தில் சங்கடமும் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் இதை என்னைப் பெற்றவள் கேட்டால் இருதயம் வெடித்து விடுவாளே” என்று எழுதினான். இந்தப் பாடல் இராணுவ டாக்டரிடம் அகப்பட்டுக் கொண்டது. அவர் இந்தச் சிறுவன் தடித்தனமான வாழ்க்கைக்கு லாயக்கற்றவனென்பதைக் கண்டு விடுதலைச் சீட்டுத் தந்து இராணுவத்தினின்று விலக்கி விட்டார்.

இராணுவத்தினின்று விடுதலை பெற்ற பிடோவி சில காலம் மீண்டும் பள்ளிக்கூடத்துக்குப் போனான். பள்ளிப் படிப்புப் பிடிக்கவில்லை. பிறகு ஒரு நாடகக் கம்பெனியில் சேர்ந்து சில காலம் சுற்றினான். கடைசியில் அதையும் வெறுத்துக் கவிதைகளை எழுதிப் பிழைக்கத் தொடங்கினான்.

பளிச்சுப் பளிச் சென்ற பதங்களில் கட்டித் தங்கம் போன்ற கருத்துக்களை யமைத்து அவன் பாடிய கவிதைகள் அவன் நாட்டினருக்குப் பிடித்தன. அவனுடைய புத்தகங்களை அனைவரும் விரும்பினர். பிடோவியின் தரித்திர வாழ்வு மறைந்தது. தன்னிடம் கொஞ்சம் காசு சேர்ந்ததும் முதன் முதலில் அவன் செய்த காரியம் என்ன தெரியுமா? தாய் தந்தையர்களை வரவழைத்துச் சம்ரட்சிக்கத் தொடங்கினான். அப்போதுதான் அந்தக் கிழவனுக்குப் பையனின் கவிதையிடம் மதிப்பு ஏற்படத் தொடங்கிற்றும். பிடோவிக்கு வயது இருபத்தைந்தே ஆயிருந்தது. ஆயினும் அவனைக் கவிச்சக்கிரவர்த்தி என்று ஹங்கேரி முழுவதும் கொண்டாடிற்று. அந்தக் காலத்தில் அவன் ஒரு பெண்ணைக் காதலித்து மணமும் செய்து கொண்டான். காதலியின் அன்பு அவனது கவிதையை இன்னும் விருத்தி செய்தது.

ஆனால், அடுத்த வருடம் 1848-ம் வருஷம். ஐரோப்பா முழுவதும் பெரிய யுகப் புரட்சி ஒன்று கிளம்பியது. முடியரசுகளை ஒழித்துக் குடியரசுகளை ஸ்தாபிக்க வேண்டுமென்ற கூக்குரல் உச்சஸ்தாயியி லிருந்தது.

பிடோவிக்கு ஜன்மபூமியிடம் ஓர் அன்பும் ஆவேசமும் ஊறின. ஹங்கேரிய மக்களுக்குச் சுதந்திரம் வேண்டுமென்று அப்போது மகா வீரன் ‘கோஸத்’ கிளர்ச்சி செய்து கொண்டிருந்தான். அந்தக் கிளர்ச்சிக்கு அநுகுணமாக பிடோவி நெருப்பைக் கக்கும் பாட்டுக்கள் பலவற்றைப் பாடத் தொடங்கினான். இளைஞர்களெல்லாம் பிடோவியின் கீதங்களைத் தெருக்களில் பாடத் தொடங்கினர். “விடுதலைப் போரில் வீழ்வதே மோட்சம். அந்தச் சாவுதான் எனக்கு வேண்டும்” என்று பிடோவி அடிக்கடி பாடுவான். அவனுடைய பெற்றோர் ஞாபகார்த்தமாக அவன் இசைத்த ஓர் கீதத்தில் “எனக்கு ரணகளத்தில் சாவு கிடைக்கும்படி அருள்வீரா?” என்று கேட்டிருக்கின்றான்.

கவிஞனின் மனோரதம் பூர்த்தியாகும் சந்தர்ப்பம் நெருங்கிற்று. ருஷியாவும், ஆஸ்திரியாவும் சேர்ந்து கொண்டு ஹங்கேரியர்களை நசுக்கத் தொடங்கினர். 16 ஆயிரம் எதிரிகள்! கவிச்சக்கிரவர்த்தி பிடோவி ஒரு சாதாரண ஸோல்ஜர் போலக் கையில் வாளேந்தி 3000 தேச பக்தர்களோடு ரணகளத்தில் புகுந்தான். போர்க்களத்தில் இந்தச் ‘சோனி’ போட்ட சண்டை அனைவரையும் பிரமிக்கச் செய்தது. 16 ஆயிரம் எதிரிகளுக்கு முன்னால் 3000 தேச பக்தர்கள் என்ன செய்ய முடியும்? தோல்விதான். ‘பிடோவி’ அவனது ஆசைப்படியே ரணகளத்தி லிறந்தான். எத்தனையோ பிணங்களோடு அவனது சடலத்தையும் ஏதோ ஒரு குழிக்குள் போட்டுப் புதைத்து விட்டார்கள்.

ஆனால் இன்றைக்கும் அவனது நாட்டுப் பாட்டுக்களை ஹங்கேரியத் தொண்டைகள் உரக்கப் பாடுகின்றன; சங்கீத வித்வான்கள் இசைக்கின்றனர். 26 வயதுக்குள் உலகையே மோகிக்கச் செய்த ஆவேச புருஷர்களில் அலெக்ஸாண்டர் பிடோவியும் ஒருவன்.

உலகப் பிரசித்திப் பெற்ற

ஆ. அப்பாதுரை முதலியார் அண்டு சன்,

பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம்,

முதலிய வாடை கமழுகின்றது.

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் குணம் தங்களுக்கே தெரியவரும்.

ஆ. அப்பாதுரை முதலியார்

அண்டு ஸன்,

புகையிலை கமீஷன் ஏஜண்டுகள், அண்டு மூக்குத்தூள் வியாபாரிகள்.

39, பாரிஷ் வெங்கடாசல ஐயர் தெரு,

தபால் பெட்டி நே. 189. சென்னை.

தொழிற்சாலை: நெ. 55, ஆச்சாரப்பன் வீதி.

விவாஹத்திற்கு

ரூ. 1000

உங்களுக்கு வேண்டுமா?

விவரங்களுக்கு எமக்கெழுதவும்:—

கலியாண உதவி நிதி,

589, பைகிராப்ட்ஸ் ரோட்,

மதறாஸ்.

5 ரூபாய்க்கு ஆயிரம் அப்பளாம்

தங்கள் வீடு தேடி வரும்.

இன்றே 5 ரூ. மணியார்டர் செய்யுங்கள். சமீப ரயில்வே ஸ்டேஷனையும் குறிப்பிடுக.

ஸன்-ஸம் கம்பெனி,

வடகம், வத்தல், அப்பளாம் வியாபாரிகள்

திருநெல்வேலி ஜங்ஷன்.

பிரதாப விகடன்

ஒரு மாதாந்திர விகடப் பத்திரிகை. மாதிரி பிரதி அணா இரண்டு. வருடச் சந்தா ரூபாய் ஒன்று. நியூஸ் ஏஜெண்டுகளிடமும் ஹிக்கின்போத்தாம்ஸ் ரயில்வே புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஏஜென்ஸி விபரங்களுக்கு

மானேஜர்,

தபால் பெட்டி 23, ஜி. டி. மதறாஸ்.

பட்டக் குதிரை சவாரி



சென்னை கிறிஸ்மஸ் வேடிக்கையில் குழந்தைகள் அநுபவிப்பதற்காக, சுழல் ராட்டினங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதே மாதிரி சர்க்கார் தாஸர்களைக் குஷிப்படுத்த 'பட்ட ராட்டினம்' என்ற யந்திரத்தைத் துரைத்தனம் தயாரித்திருக்கிறது. "ஸர், கே. ஸி. ஐ. இ., ராவ் பகதூர்" என்று பலவிதமான குதிரைப் பொம்மைகள் சுழலுகின்றன. அடுத்த வருஷப் பிறப்பில் அந்தக் குதிரைகளின்மீது சவாரிசெய்யத் தங்களுக்கு அதிர்ஷ்டமுண்டா என்று கேட்டுக்கொண்டு நிற்கும் கோஷ்டியின் அழகைப் பாருங்கள்!

சர்க்கா சங்கத்தாரின் அத்தாட்சி பெற்ற

கதர் கடைகள்

இவைகளே!

மதுரை

ஏ. ஜி. சாரி அண்ட் கம்பெனி.
எம். ஆர். ஜி. ராமையர்.
மீராபாய் கதர் ஸ்டோர்ஸ்.
டி. கே. ராமா.
பிரிமியர் கதர் கம்பெனி.
புதுப்பாளையம் காந்தி ஆசிரமம் [காதி பந்தார்.

திருப்பூர்

முருகேச முதலியாரும் முனிசாமி [செட்டியாரும்.
ஆர். எஸ். முத்துசாமி செட்டியார்.
ரத்னகிரிநாதர் கம்பெனி.
தனலட்சுமி கதர் ஸ்டோர்ஸ்.
எம். கே. சங்கரப்ப செட்டியார்.
ஸ்ரீ காந்தி கதர் நிலையம்.
ஏ. பழனியப்ப முதலியார்.
ஆர். டி. முத்துசாமி செட்டியார்.

ராஜபாளையம்

மகாத்மா காந்தி கதர் வஸ்திராலயம்.
ஜவஹர் கதர் வஸ்திராலயம்.
ராஜபுத்ர கதர் வஸ்திராலயம்.

கோத்தமங்கலம்

நேரு ஸ்வதேசி ஸ்டோர்ஸ்.

நாகர்கோயில்

ஜவஹர்லால் நேரு கதர் நிலையம், [கோட்டாறு.

திருச்சினுப்பள்ளி

ராஜாஜி காதி பந்தார் லிமிடெட்.

திருவல்லிக்கேணி

காதி பந்தார் லிமிடெட்.

மாம்பலம்

மாம்பலம் சுதேசி ஸ்டோர்ஸ்.

சுத்தக் கதரையே வாங்குங்கள்.
போலிக் கதரை வாங்காதீர்கள்.

கேசவர்த்தினி

மயிர் உதிர்வதை நிறுத்துவது.

வழுக்கை செம்பட்டை இளநரைகளைப் போக்குவது.

கூந்தலை நீண்டு செறிந்து வளரச் செய்வது.

விலை அணா 12. மேற்செலவு வேறு.

தென் இந்திய ரஸாயன சாலை, லஸ், மயிலாப்பூர்.

அதிருஷ்டம்

திப்பு எழுதியது

சென்னைக்கு அருகே ஒரு ஊரிலே குதிரைகளும் கழுதைகளும் விழுந்தடித்துக்கொண்டு ஓடுகின்றனவாம். சென்னையினின்று வண்டிகள் விழுந்தடித்துக்கொண்டு அந்த ஊருக்கு ஓடுகின்றன. மனிதர்களும் விழுந்தடித்துக் கொண்டு ஓடுகின்றனர். அந்தக் குதிரைகளிலே எந்த மூதேவி முதலில் வருமென்பதைக் குறி சொல்வதற்கு எல்லோரும் பிரயத்தனிக்கிறார்கள். யாரோ சில 'அதிருஷ்ட'சாலிகள் சரியாகச் சொல்லி விடுகின்றார்களாம். அவர்களுக்குப் பத்து ரூபாய்க்கு நூறு ரூபாய் வீதம் லாபம் கிடைக்கின்றதாம். குதிரையின் காலில் எழுதியுள்ள அதே அதிருஷ்ட சக்கிரத்தை சில மனிதர்களின் மூளைகளிலும் எழுதியிருப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். இது வாஸ்தவமா ?

குதிரைகளில் இன்னின்னவைதான் முதலில் வருமென்று ஒரு சமத்து ஜோஸ்யர் சென்னையில் ஆரூடம் சொல்கின்றார். 'டிப்ஸ்' போட்டு விற்றுக் கொண்டிருக்கிறார். இவர் ஏன் இப்படிக் கடுதாசி விற்றுப் பிழைக்கவேண்டும்? அவரே பத்துப் பத்து ரூபாயாகக் கட்டிவிட்டு பந்தயக்கிளப்பின் பணத்தையெல்லாம் கிளப்பிக்கொண்டு வந்துவிடட்டுமே! ஆனல் அவர் சொல்வதையும் கேட்கவேண்டாமா? அவர் சொல்கின்றார்:—"எனக்கு அதிர்ஷ்டம் என்ற கலம் பூஜ்யமாயிருக்கின்றது. நான் எந்தக் குதிரையின்மீது பணம் கட்டுகின்றேனே அது காலொடிந்து போகும்; ஆனல் என் டிப்ஸை வாங்கி உபயோகிக்கிறவர்களுக்கு நிச்சயம் பலனுண்டு. அதிருஷ்ட சாலிகளுக்குத்தான் என் டிப்ஸை வாங்க யோசனை உண்டாகும். ஆகவே டிப்ஸ் கடுதாசி விற்றுக் காசு பண்ணவேண்டியது என் அதிருஷ்டம்! அதன் உதவியைக் கொண்டு பெருஞ் செல்வமடைய வேண்டியது ஊரார் அதிருஷ்டம்" என்று கூறுகின்றார். அதிருஷ்டத்துக்கு வியாக்கியானம் எப்படிப் போகின்றது பார்த்தீர்களா? "இன்றைக்கு எனக்குப் பழையதுபோடு; நாளைக்குப் பசியா வரம் தருகிறேன்" என்று கூறிய சந்யாசியின் சொற்களைப் போலல்லவோ இது இருக்கின்றது! ஆனல் அவர்மீது தப்பில்லை. அதிர்ஷ்ட தாஸர்கள் உலகில் அதிகப்பட அதிகப்பட இந்த மாதிரி பேர்வழிகள் தங்கள் லாபத்தையும் பார்த்துக் கொள்வார்கள் என்றே!

வங்கம் ஐயங்கார் ஓர் பந்தயப் பித்தர். பப்பாமெண்ட் பந்தயத்தினின்று குதிரைப் பந்தயம்வரை ஓர் கை பார்த்துவிடும் ஸ்வபாவம் அவருக்கு உண்டு. சைன பஜார் வீதியில் ஒருநாள் பந்தய டிப்ஸ் வாங்குவதற்காக அவர் மணி பாக்ஸைத் திறந்தார். லா காலேஜ் அருகில்தான் 'டிப்ஸ்' கடுதாசி வாங்கினது. வாங்கிக்கொண்டு வீடு திரும்பி விட்டார். வீட்டுக்கு வந்து மணி பாக்ஸைப் பார்த்தால் அதில் இருந்த நூறு ரூபாய் நோட்டைக் காணும்! "ஐயோ பாழும் அதிர்ஷ்டமே!" என்று அவர் தனது அதிர்ஷ்டத்தை நொந்துக் கொண்டார். அஜாக்ரதை யென்பதற்குப் பதிலாகக் கண்டு பிடிக்கப்பட்ட உயர்ந்த வார்த்தை அதிர்ஷ்டம்!

வங்கம் ஐங்கார் யோசித்தார். மூளை குழம்பிற்று. "ஒஹோ! டிப்ஸ் வாங்குவதற்கு லா காலேஜ் அருகில் மணி பாக்ஸைத் திறந்தோமே, அங்குதான் விழுந்திருக்கவேண்டும். அதிருஷ்டமிருந்தால் என் பணம் எனக்கு திரும்பக் கிடைக்கலாகாதா?" என்று எண்ணிக்கொண்டு ஓடோடியும் லா காலேஜுக்கு அருகில் சென்றார். கீழே தேடினர்.

ஹா! என்ன ஆச்சரியம்! நோட்டைக் காணவே யில்லை. ஆனல் அங்கு ஓர் மூலையில் ஒரு பத்து ரூபா நோட்டோடு தொண்ணூறு ரூபாய்க்கு ஒரு பிராமிஸரி நோட்டொன்றும் எழுதி வைக்கப்பட்டு, அவைகளில் தலையில் கல்லொன்றும் வைக்கப்பட்டிருந்தது. என்ன அதிருஷ்டமையா இந்த வங்கம் அவர்களுக்கு!

இந்தக் கதையை யாராவது நம்புகின்றீர்களா? நம்புகிறவர்கள் நம்பட்டும். இது வெறும் பச்சைப் புளுகு என்று நான் மட்டும் சொல்லிவிடுகின்றேன். உலகில் 'அதிருஷ்ட' சம்பந்தமான கதைகளெல்லாம் இந்தக் கதை போன்றவைதா னென்பது எனது எண்ணம்.

கோயில் பிரகாரத்தில் 304 ஆடிக் கொண்டிருந்தார்கள். ஒரு 'கை'க்கு ஆட்டமே வரவில்லை. நாலு ஆட்டம் தோற்றுகிவிட்டது. உடனே அவன் அந்தக் கோயில் தெய்வத்துக்கு ஓர் வேண்டுதலை செய்துகொண்டான். ஓர் கேள்விக்கு நல்ல சீட்டு வந்தால் கோயில் உண்டியில் நாலணப் போடுவதாக மனதுக்குள் சத்தியஞ் செய்தான். அடுத்த கலவையில் நான்கும் கிளாவர் சீட்டாகவே அவனுக்கு விழுந்தது. என்ன 'அதிர்ஷ்டம்'! 210 வரையில் கேள்வியை ஒட்டினன். சீட்டைக் கீழே வைத்துவிட்டு விடுவிடென்று ஓடிச் சென்று நான்கு அணவை அந்த உண்டியில் போட்டுவிட்டுத் திரும்பினன். ஆட்டத்தில் அமர்ந்து அந்தத் தடவை ஜெய மடைந்தான். ஆனல், அடுத்த கலவையின்போது, ஜாக்கி, ஒன்பது, ஆஸ், பத்து எல்லாம் எதிர்க்கட்சியில் போய்விட்டது. அதே துருப்பில் கேட்டுத் தோற்றதுதான் இவன் கண்ட லாபம். தோற்றதுமட்டு மல்ல, 'எதிர்க்கோட்டும்' ஆகிவிட்டது. அவனுக்கு வந்த கோபத்துக்குக் கங்கு கரையில்லை. எழுந்தான். விடுவிடெனச் சென்றான். கோயில் உண்டியின் அடிப்பலகையைத் தட்டினன். உடைத்தான். தான்முன்னே போட்ட நாலணவையும் இன்னும் யாராரோ பக்தர்கள் போட்டிருந்த தம்பிடிகளையும் தன் பையிலிட்டுக்கொண்டு திரும்பி வந்தான். 'அதிருஷ்ட' வேட்டையாடுகிறவர்களின் தெய்வ பக்திக்கு இவன்தான் சரியான உதாரண புருஷன். லாபம் வரும்வரையில்தான் தெய்வத்திடம் பக்தி. லாபம் வராமற் போனலோ அல்லது லாபம் வந்த பிறகோ அவன் மனது அடையும் நிலையைப்பற்றி கேட்க வேண்டியதில்லை. இந்த மாதிரி மனித மனேதத்துவம் இருக்கும்போது கோயில் ஜீரணேத் தாரணத்திற்காக அதிருஷ்டச் சீட்டுக்கள் விற்கின்றார்களே அவர்களை என்னென்று சொல்வது?

'கடைக்குப் போய்க் குழந்தைக்காக ஓர் பால் புட்டி வாங்கி வாருங்கள்' என்று மனைவி சொன்னள். கடைக்குப்போய்ப் பத்தணக் கொடுத்து ஒரு

புட்டியை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தான் புருஷன். நல்ல சமயத்தில் —அது ராகுகாலமில்லை—மனைவி அந்தப் புட்டியை உடைத்தாள். புட்டிக்குள் பாலுமில்லை, பவிஷுமில்லை. வெறும் சாக்கடைத் தண்ணீர் மாதிரி எதையோ நிரப்பி, புட்டியின்மேலே அழகான லேபிள்மட்டும் ஒட்டப்பட்டிருந்தது. இந்த மாதிரி ஆனது குழந்தையின் அதிருஷ்டமா? உடைத்த மனைவியின் அதிருஷ்டமா? அல்லது புருஷன் கடைக்குப் புறப்பட்டபோது சரியான சகுனமாகாதது காரணமா? இத்தகைய சந்தர்ப்பத்தில் அதிருஷ்டமென்று சாக்குக் கூறிவிட்டு எந்த வீட்டுக்காரனாவது சும்மாயிருப்ப னண்டா? "அதிருஷ்டமாவது மண்ணாங் கட்டியாவது; இது வியாபார அயோக்கியத்தனம்!" என்று இரைந்துகொண்டு வீட்டுக்காரன் கடைக்கு ஓடுவானன்றோ! எங்கெந்தக் காரியத்துக்கு மாற்றுச் செய்துகொள்ள முடியுமோ, அல்லது சமாளிக்க முடியுமோ அதையெல்லாம் அதிருஷ்டத்தின் பங்குக்குச் சேர்க்க மாட்டோ மென்கிறார்கள். ஆனால் எங்கெந்த விஷயத்தில் வெற்றியடையத் தங்களுக்குத் திறமைக் குறைவிருக்கின்றதோ அவைகளில் வெற்றி கிடைத்தாலும் அதிருஷ்டம் என்கிறார்கள்; வெற்றி கிடைக்காவிட்டாலும் துரதிர்ஷ்டம் என்று முடித்து விடுகிறார்கள். ஆகவே அதிர்ஷ்டம் என்றால், அநேக விடங்களில் 'சாக்கு' என்றுதான் அர்த்தம் கொள்ள வேண்டியிருக்கிறது.

சனியனா? மணப் பெண்ணா?

[இந்த கூடார்த்தப் படம் "பிரீ பிரஸ்"ஸினின்று எடுக்கப்பட்டது.]

இந்திய 'ரூபாய்' என்ற இளம் வாலிபனை இங்கிலாந்தின் 'ஸ்டர்லிங்' என்ற சூன்யக்கார கிழவியோடு பலவந்தமாகக் கல்யாணஞ் செய்துவிட வேண்டுமென்பது ஓர் சூழ்ச்சி. இந்தக் கிழவியிடமிருந்து தப்பித்துக் கொள்ள இளைஞன் செய்த முயற்சியெல்லாம் வீணாய் விட்டன. சமீபத்தில் டெல்லி சட்ட சபை என்ற போலிப் புரோகிதன் இந்தக் கல்யாணத்தை ஊர் ஜிதம் செய்திருக்கிறான். கிழவியை நோவதா? புரோகிதனின் சூழ்ச்சியை நோவதா?

மஞ்சள் செய்த "கலாட்டா"

('தாரகன்' எழுதியது)

யாருக்குத்தான் கோபம் வராது? பல்லாயிர வருஷங்களாக ராஜ்யபாரம் செய்துகொண்டிருந்த ஒரு பேர்வழியைப் புதிய ஆசாமி ஒருவன் கழுத்தைப் பிடித்துத் தள்ளினால், அவன்சும்மாப்போவானா? கேவலம் அசேதன வஸ்துவான மஞ்சளுக்குக்கூட இந்த மாதிரி கோபம்வந்ததுபோல் தோன்றுகிறது. புது நாகரிக சோப்புகள் வந்து, மஞ்சளை விரட்டிவிட்டதல்லவா? அந்த மஞ்சள் போட்ட ஒருமுடிச்சு, பெரிய முடிச்சாயிருக்கிறது. பெரிய பெரிய தேசபக்தர்களெல்லாம் ஆனமட்டும் அவிழ்த்துப் பார்க்கிறார்கள், இதை அவிழ்க்க முடியவில்லை. அது என்ன முடிச்சு? அந்த முடிச்சுக்குத்தான் 18 பென்ஸ் நாணயமாற்று என்று பெயர். இந்த முடிச்சு விழுவதற்கு மஞ்சள் செய்த கைங்கர்ய ரகஸ்யத்தை, ஒரு பொருளாதார சாஸ்திரி வெளிப்படுத்தி யிருக்கிறார். அது ஒரு தமாஷான சம்பவம். சொல்லுகிறேன், கேளுங்கள்.

1925-ம் ஹு ஆகஸ்டு மீ 25 உ நமது தேசத்துக்கு ஒரு கிரகணம் வந்தது. அந்தக் கிரகணத்துக்கு ஹில்டன் யங் கமிஷன் என்பது இன்னொரு பெயர். இந்தக் கமிஷனை பிரிட்டிஷ் சர்க்கார் நியமித்தது. இந்திய-ரூபாய்க்கு ஒரு நிலைத்த மதிப்பை உண்டாக்குவதற்கு என்னென்ன செய்ய வேண்டுமென்று இந்தக் கமிஷன் சில சிபார்சுகள் செய்தது. அந்தச் சிபார்சுகளில் ஒன்றுதான் 18 பென்ஸ் விகிதம். சர்க்கார் இதை ஒப்புக்கொண்டுவிட்டது.

ஒரு ரூபாய்க்கு, 18 பென்ஸ் விகிதம் என்ற குல்லாயைத்தான் போட வேண்டுமென்பதை அவர்கள் எப்படிக் கண்டு பிடித்தார்கள் என்பதில்தான் இருக்கிறது சூட்சுமம். ஒரு தேசத்தின் முக்கிய சாமான்களின் விலைகளைக் கொண்டுதான், அந்தத் தேச நாணயத்தின் மதிப்பைப் பெரும்பாலும் நிர்ணயிப்பது வழக்கம்; 100 ரூபாயாகவிருந்த முக்கிய சாமான்கள் பல 50 ரூபாய்க்குக் கிடைத்தால் ரூபாயின்

மதிப்பு இரண்டுபங்கு உயர்ந்து விட்டதாகச் சொல்லலாம். 100 ரூபாயாக விருந்த ஒரு சாமான் 200 ரூபாய்க்குக் கிடைக்குமானல், ரூபாயின் மதிப்புப் பாதி விழுந்துவிட்டது என்று சொல்ல வேண்டும். ஆனல், நாம் பல சாமான்களை எடுத்துக் கொள்ளவேண்டும்; அவையும் முக்கியமானவையாக இருக்க வேண்டும். நெல்லு விலை மாத்திரம் விழுந்து மற்ற சாமான் எல்லாம் கிராக்கியாயிருந்தால், பலகாரணங்களால் நெல்லின் கிராக்கி குறைந்து விட்டதென்றுதான் சொல்லவேண்டும். ரூபாயின் மதிப்பு விழுந்துவிட்டதாக நினைக்கக்கூடாது. பொருளாதார சாஸ்திரிகள் இப்படிச் சொல்லுகிறார்கள். இனிமேல், ஹில்டன் யங் கமிஷன்காரர்கள் கணக்குப் போட்ட விந்தையைச் சொல்லுகிறேன்.

1873-ம் வருஷத்தில் 100 ரூபாய்க்குக் கிடைத்த அரிசி, கோதுமை, ராகி, மஞ்சள் போன்ற பற்பல சாமான்கள் 1924-ம் வருஷத்தில் எவ்வளவு விலைக்குக் கிடைக்கின்றன என்று சில புள்ளிகள் எடுத்தார்கள். ஒவ்வொரு சாமானும் பல காரணங்களால், பல தினுசுகளாக விலை ஏறி இறங்குகின்றன. ஒவ்வொன்றுக்கும் தனிப்பாதை. மஞ்சள் நடந்தைபாதையை மலையும் மடுவும் குறுக்கிட்டபாதைக்கு ஒப்பிடலாம். கீழேயிருக்கும் சில கணக்கைப் பார்த்தால்தான் உங்களுக்கு விஷயம் விளங்கும்.

	1873 ஞு விலை.	1922 ஞு விலை.
அரிசி	100	335
கோதுமை	100	246
ராகி	100	380
கம்பு	100	239
மஞ்சள்	100	712

இன்னும் பல சாமான்களின் விலைகளையும், கூலிகளையும், தொழிற்செலவுகளையும் அவர்கள் இதே மாதிரி கணக்கெடுத்தார்கள். ஆனல் எதுவும், மஞ்சள் மாதிரி ஆகாசத்தில் பறக்கவில்லை. எல்லா விலையையும் சேர்த்து ஒருசராசரி போட்டார்கள். அதைக்கொண்டு, ரூபாய்க்கு 18 பென்ஸ்தான் சரியான மதிப்பு என்று கமிஷனர்கள் முடிவு சொல்லிவிட்டார்கள்.

மஞ்சள் அப்படி முக்கியசாமானல்ல; அப்படி முக்கிய சாமானுக வைத்துக்கொண்டாலும், அதன் விலை என்னவோ கண்டபடி ஏறி, கண்டபடி இறங்கி விட்டது. 1924ஞு த்தில் அது 454 ரூபாய்க்கும், அடுத்த வருடத்தில் 180 ரூபாய்க்குமாக அது அடியோடு விழுந்துவிட்டது. சராசரியில் அதையும் சேர்த்ததால், கணக்கில் ஏமாற்றம் ஏற்பட்டுவிட்டது. பள்ளிக்கூடப் பையன்களைக் கேட்டால்கூட, இது அசட்டுக் கணக்கு என்று சொல்லுவார்கள். ஆனல் இந்தக் கணக்கை வைத்துக் கொண்டு, "படே படே" பொருளாதார சாஸ்திரிகளான ஹில்டன் யங் கமிஷன்காரர்கள் 18 பென்ஸ் நாணய மாற்று விகிதமே ஏற்றது என்று ரூபாயின் தலையில் எழுதி விட்டார்கள். "பென்ஸை என்னல் தாங்க முடியாது; இதை எடுத்து விடுங்கள். என்னல் இயன்ற சுமையை நானுகத் தாங்கிப் பார்க்கிறேன். இல்லாவிட்டால் இரண்டு பென்ஸை எடுத்து 16 பென்ஸாக்கவாவது குறையுங்கள்." என்று ரூபாய் அலறுகிறது. சர்க்காரோ கல்லுப் பிள்ளையார் மாதிரி, சும்மா யிருக்கிறார்கள். இத்தனையும் கேவலம் மஞ்சள் செய்த "கலாட்டா" என்பதை நினைக்கும் போது வேடிக்கையா யிருக்கிறதல்லவா?

தி யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

தலைமை ஆபீஸ் மதராஸ். 1906ல் ஸ்தாபிக்கப்பட்டது.

டிரஸ்டி :—சென்னை அபிஷியல் டிரஸ்டி.

2 கோடி ரூபாய்களுக்கு அதிகமான பாலிஸிகள். 55 லக்ஷத்திற்கும் அதிகமாகவே ஆஸ்தி.
12 லக்ஷத்திற்கும் மேலாகவே வருட வருமானம்.

இக்கம்பெனிக்கு உண்டான விசேஷ லக்ஷணங்கள் பலவற்றுள் ஒரு சில :—
இக்கம்பெனியின் நிதி பூரண நம்பிக்கையுள்ள வகையிலிருக்கிறது.
இது ஜரூராகவும் பக்ஷபாத மின்றியும் பாத்யஸ்தர்களுக்குப் பணம் கொடுக்கிறது.
இதில் சிக்கனமான நிர்வாகம் நடக்கிறது.
மட்டான சந்தா, அவைகளுடன் கூடி திருப்திகரமான போனஸ் பணம்.
பாலிஸிதாரர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் சித்தமாகவும், வெகு திறமையுடனும், தயவோடும் செய்து தருகிறது.

பூரண விவரங்களுக்குத் தலைமை ஆபீஸிற்கோ, அல்லது நாட்டின் பல பாகங்களிலும் உள்ள எங்கள் கம்பெனிப் பிரதிநிதிகளுக்கோ எழுதித் தாமதமின்றித் தெரிந்து கொள்ளலாம்.

"யுனைடெட் இந்தியா அஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்"
செம்புதாஸ் தெரு, சென்னை.

M. K. ஸ்ரீனிவாசன்,
மானேஜிங் டைரெக்டர்.

உடையார் முன் உடைந்ததே!

(மகா மகோபாத்தியாய உ. வே. சாமிநாதய்யர் எழுதியது.)

[தமிழ் நாட்டில் வித்வான்களை ஆதரித்துப் புகழ் வாங்கிய சமஸ்தானங்களில் உடையார்பாளையம் ஜமீனும் ஒன்று. யுவரங்கர் என்ற ஜமீன்தாரின் காலத்தில் வடமொழிப் பண்டிதரான கோபால சாஸ்திரியார் ஆஸ்தான வித்வானாயிருந்தார். தமது குருவை ஒரு முறை ஆஸ்தானத்துக்கு அழைத்துச் சென்ற பொழுது நிகழ்ந்த பின்வரும் தமாஷ் சம்பவம், பழந்தமிழ் நூலாராய்ச்சியில் வல்லவரும் தமிழ் அன்பர் மகாநாட்டு வரவேற்புச் சபைத் தலைவருமான மகா மகோபாத்தியாய சுவாமிநாதய்யர் அவர்கள் "கலைமகள்" பத்திரிகையில் எழுதியுள்ள ஓர் கட்டுரையினிடையே காணப்படுகின்றது.—ப. ர்.]

ஒருநாள் கோபால சாஸ்திரிகள், தம் குருவை உடையார் பாளையத்திற்கு அழைத்துச் சென்றார். ராமாசாஸ்திரிகள் சொல்லிக் கொடுத்தபடி ஒரு தேங்காயை எடுத்துச் சென்று ஒரு சுலோகம் சொல்லி யுவரங்கர் கையில் கொடுக்க நினைத்து, தேங்காயையும் மங்கள சுலோகத்தையும் வித்தப் படுத்திக் கொண்டார். அரண்மனையில் நுழைந்தவுடன் அவருக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. அங்கங்கே காவலாளர்கள் சட்டையணிந்து கையில் ஆயுதங்களோடு நிற்றலையும் அங்கே பழகுபவர்களெல்லாம் பயத்துடனும் மரியாதையுடனும் ஒழுகுவதையும் கண்டார். அத்தகைய காட்சிகளை அதற்கு முன் அவர் காணாதவர். பின்பு உள்ளே சென்று யுவரங்கருடைய ஆஸ்தான மண்டபத்தை அடைந்தார். கோபால சாஸ்திரிகள் அங்கே சென்றவுடன், யுவரங்கர்பால் ராமா சாஸ்திரிகளை அழைத்துச் சென்றார். அங்கே இருந்த காட்சியைக் கண்ட ராமா சாஸ்திரிகளுக்கு உடம்பெல்லாம் வேர்த்தது. அதுகாறும் அத்தகைய இடங்களுக்குச் சென்றவரல்ல ராதலின், மனத்திற்குத் திருப்தியில்லாத காரியம் ஒன்றை நிர்ப்பந்தத்திற்காகச் செய்ய ஒப்புக் கொண்டது பற்றி அவர் மனம் கலக்கமுற்றது. யாசகம் செய்தலைப் போன்ற ஒன்றைத் தாம் செய்யத் துணிந்துவிட்டதாக அவர் எண்ணிய கருத்தே அவரை அந்த நிலைக்குக் கொண்டுவந்து விட்டது.

யுவரங்கர் அவர்களைக் கண்டு எழுந்து நின்றார். "இவர்கள் தாம் எங்கள் ஆசார்யர்கள்" என்று கோபால சாஸ்திரிகள் யுவரங்கரிடம் சொன்னார்.

"அப்படியா! தன்ய னானேன்" என்று சொல்லிக்கொண்டே ஜமீன்தார் ராமாசாஸ்திரிகளைப் பார்த்தார். அவருடைய உடம்பு முழுவதும் வேர்த்திருப்பதையும் நடுங்குவதையும் கண்ட ஜமீன்தார், பேசினால் அவருக்குத் தைரியமுண்டாகுமென்று எண்ணி, "தங்கள் திருநாமத்தை நான் அறியலாமோ?" என்று கேட்டார்.

நடுங்கிக்கொண்டிருந்த சாஸ்திரிகளுக்குப் பேசமுடியவில்லை; கஷ்டப்பட்டு, "ராமாமங்கலம் கோழிசாஸ்திரிகள்" என்று சொன்னார். கோழிமங்கலம் ராமாசாஸ்திரிகள் என்று சொல்லவந்தவர் அச்சத்தால் அப்படி மாற்றிச் சொல்லிவிட்டார். உடனே சுலோகத்தையும் சொல்லித் தேங்காயை யுவரங்கர் கையில் கொடுத்தார். கொடுக்கும்பொழுது கை நடுக்கத்தால் அவர் கையிற்படும்படி சரியாகக் கொடாமையால் அது தவறிக் கீழே விழுந்து உடைந்துவிட்டது.

பின்புதான் சாஸ்திரிகளுக்கு உணர்ச்சியும் தைரியமும் உண்டாயின. எவ்வளவோ பேர்கள் கூடியிருக்கிற ஓரிடத்தில் தாம் அங்ஙனம் நடந்துகொண்டது அநுசிதமென்றும் அவ்வளவு அதைர்யப்படுதல் கூடாதென்றும் எண்ணினார். தேங்காய் உடைந்தவுடன் அந்த ஒலியே அவருக்கு ஒரு துணிவை உண்டாக்கிற்று. உடனே தலைநிமிர்ந்து, "உங்களை உடையாரென்று சொல்வார்கள். ஆயினும் என்ன காரணத்தாலோ இது விழுந்து உடைந்து விட்டது" என்று சொன்னார். அங்கே இருந்த யாவரும் அவரைக் கவனித்துக் கொண்டே இருந்தவர்களாதலின், அந்தச் சாதுர்ய மான பேச்சைக் கேட்டு மகிழ்ந்தார்கள்.

விளம்பரம்

சங்கு நூல்கள் யாவும் அடியிற் கண்ட விலாஸத்தில் குறித்த விலைப்படி கிடைக்கும்.

V. B. சாஸ்திரி,
சங்கு ஏஜெண்ட்,
244, பேயர் வீதி, ரங்கூன்.

ஹோர் தந்த வரம்

இனிமேல் நமது கிராமவாசிகளுக்கு என்ன குறை? வேலைதான் கிடைக்கவில்லை யென்றால் பொழுதும் தொலைய மாட்டேனென்கிறதே என்று வருந்துகின்ற கிராமவாசிகளுக்கு வரப்பிரசாதம் கிடைத்துவிட்டது. "சென்னை, பம்பாய், எல்லப்புறம் முதலிய மாகாணங்களில் கிராமத்துக்குக் கிராமம் ரேடியோக் கருவிகளை ஏற்படுத்த வேண்டுமென்று தீர்மானமாகி யிருக்கிறது" என்று ஸாமுயேல் ஹோர் துரை பார்லிமெண்டில் வாக்குத் தத்தம் செய்து விட்டார். இனிமேல் பிரிட்டிஷ் துரைத்தனத்தின் மீது யாரும் குறை சொல்லமாட்டார்கள். ஏனெனில் 24 மணி நேரமும் ரேடியோ பேசிக் கொண்டோ பாடிக்கொண்டோ இருக்கும். அதைக் கேட்கும் அலுவலிலேயே கிராமவாசிகளுக்குப் பொழுது போகிவிடும். சோற்றுக் கவலைகூட மறந்துபோகு மென்றல்லவோ சிலர் சொல்கிறார்கள்.

ஏகாதிபத்தியத் திருநாளன்று லண்டனில் பேசுவதை நமது புதுக்குடி வாசிகள் கேட்டுக் களிக்கலாம்: படேவியா ஆரஞ்சுகள் எப்படி உற்பத்தி செய்யப் படுகின்றன வென்ற விஷயத்தை முருகன் சாம்பார் தெரிந்து கொள்வார். கிராமப் புனருத்தாரணத்தைப் பற்றி ஆங்காங்கு கலெக்டர்கள் பேசும் பிரசங்கங்களை எல்லோரும் கேட்கலாம். கொலம்போவில் 'லிலி' என்ற ஆங்கிலச் சீமாட்டி பாடும் பாட்டுக்குச் செம்மங்குடி புஷ்பா தாளம் போடலாம். அவ்வப்போது போடும் அவசரச் சட்டங்களைப் பற்றி அதிகாரிகள் செய்யும் வியாக்யானத்தை கிராம முனிஸீப்புகளும் அறிந்து கொள்வார்கள். ஏது? ஏது? இனிமேல் குறைவேது? வேலையில்லாத் திண்டாட்டமேது? ஸர்வம் ரேடியோமயம்! தாங்கொணாத சுகம்!

இதுவும் கல்யாணச் சேலவே

வடக்கே கேதாவால் என்ற ஊரில் ஒரு பிராமணன் ஆறு வயதுப் பெண்ணைக் கலியாணஞ் செய்து கொண்டான். சாரதாச் சட்டத்தின்கீழ் அவனுக்கு 300 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. ஹூம்! கல்யாணச் செலவு ஜாப்தாவில் இந்தச் செலவையும் சேர்த்துக் கொள்ளவேண்டியதுதானே.

"கோடி கொடுப்பினும் திருப்தியுறேன்"

(காந்தி-ஹரிஜன சம்பாஷணை)

சமீபத்தில் ஹரிஜனங்களின் பிரதிநிதிகளடங்கிய ஒரு கூட்டத்தாருக்கும் காந்திஜீக்கும் பின்வரும் சம்பாஷணை நடந்தது :—

கேள்வி :—எங்கள் கஷ்டங்களையெல்லாம் தீர்த்துவைக்க, கோயில் பிரவேசம் ஒன்றுதான் வழியென நீங்கள் கருதுகிறீர்களா ?

காந்திஜீயின் பதில்:—ஆலயப் பிரவேசத்துக்கு உள்ள தடை அடியோடு ஒழியும் வரையில், தீண்டாமை தொலைந்ததாக நான் கருத மாட்டேன்.

கேள்வி :—எங்கள் பொருளாதார நிலைமை உயர, உதவிபுரிய மாட்டீர்களா ?

காந்திஜீயின் பதில் :—அதை மறக்கவில்லை. ஆனால், ஹிந்து சமூகத்துக்குப் புறம்பாக உங்களை ஒதுக்கிவைத்துவிட்டு, உங்களுக்குக் கோடி ரூபாய்தான் தரட்டுமே; அரண்மனைகளாய்த்தான் கட்டிக் கொடுக்கட்டுமே—அவற்றைக் கொண்டு நான் திருப்தியடைய மாட்டேன். எவ்விதத்தும் ஜாதி ஹிந்துக்களுக்குச் சமமாய் நீங்கள் நடத்தப்பட்டால்தான் நான் திருப்தியடைவேன்.

கேள்வி :—நீங்கள் வசூலிக்கும் பணம் சரியாகச் செலவழிக்கப்படுமா என்பதில் எங்களுக்குச் சந்தேகமாயிருக்கிறது. அதை எங்களிடமே தந்துவிட லாகாதோ ?

காந்திஜீயின் பதில் :—இந்தப் பணத்தைச் செலவிடுவதில் ஹரிஜனங்கள் சம்பந்தப்படக் கூடாதென்று நான் சொல்லவில்லை. ஆனால், இவ்வியக்கம் ஜாதி ஹிந்துக்களின் பிராயச்சித்தமாகும். இந்தப் பணத்தைச் செலவழிக்க மிக நல்லவழி என்ன என்பதை அவர்களே கண்டு பிடிக்க வேண்டும். ஹரிஜனங்களின் ஆலோசனையை அவர்கள் கேட்டுக் கொள்ள வேண்டியதுதான். ஆனால், செலவின் நிர்வாகத்தை அவர்களே புரிய வேண்டும். பிரசாரத்துக்குச் சொற்பத் தொகைதான் செலவழிக்கப்படும். பணத்தின் பெரும் பாகமும் ஹரிஜனங்களின் கைக்கே நேரே போய்ச் சேரும். ஹரிஜன சேவையிலிறங்கி யிருப்போரில் அநேகர் சுயநலமற்றவர்; ஒழுக்கத்திற் சிறந்தவர். எந்த இயக்கத்தில் அவர்கள் சேர்ந்தாலும் அதற்குப் பெருமையே உண்டாகும். மேலும், ஹரிஜனங்கள் எவ்வளவு வீழ்ச்சி யடைந்திருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் கவனிக்க வேண்டும். அவர்கள் வாயில்லாப் பூச்சிகள். தாங்கள் மனிதரிலும் கடைப் பட்டவரென அவர்கள் நினைத்துக்கொண் டிருக்கிறார்கள். ஒரிஸாவில் ஒரு கிழவன் வந்தான். அவன் வாயிலே வைக்கோலைக் கௌவிக் கொண்டிருந்தான். 'நீயும் என்னைப் போலவே ஒரு மனிதன்தான்' என்று அவனிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். கொச்சியிலே வேறோர் ஹரிஜன் வந்தான். அவன் தேகம் வெடவெடவென்று நடுங்கிற்று. அவன் பார்க்கத் தகாதவனாம். உயர் வகுப்பினரிடையே வர அவனுக்கு அவ்வளவு பயம். இந்த ஜனங்கள் எங்கள் அவமானமே உருவெடுத்து வந்த அடையாளம் போல் இருக்கிறார்கள். நான் இந்த இயக்கத்தில் இயங்கி யிருப்பதே, இந்த விஷயங்களை எண்ணித்தான். இந்த சேவை, ஹரிஜனங்களைத் திருப்தி செய்வதற்காகக் கைக்கொள்ளப் பட்டதல்ல; கண்டிப்பாகச் செய்து தீர்க்க வேண்டிய ஓர் கடமையே யாகும். எங்கள் அவமானத்தை நீக்கிக் கொள்ளுவதே எங்கள் விருப்பம்; அந்த முயற்சியில் உயிரையே வேண்டுமாயினும் அர்ப்பணம் செய்ய நாங்கள் தயாராயிருக்கிறோம். சுயநலமற்றதோர் சேவையைப் புரியவே நாங்கள் முயன்று கொண்டிருக்கிறோம். ஹரிஜனங்கள் இதை அங்கீகரியாவிட்டால், நாங்கள் மிகத் தாமதித்து விட்டதுதான் காரணமென நான் நினைப்பேன். ஆனால், இந்த ஒருமாத அனுபவத்திலிருந்து, ஹரிஜனங்களிற் பெரும்பாலோர் எங்கள் சேவையை மகிழ்வுடன் அங்கீகரிப்பதாக, நான் கண்டு கொண்டேன். உங்கள் வாழ்க்கையின் ஒரு துறையைக் கூட விடாமல் சீர்திருத்தவே நாங்கள் உழைக்கிறோம். உங்களுக்கு ஏதோ தான தர்மம் செய்பவரைப்போல் உங்களிடம் நாங்கள் வரவில்லை; உங்கள் ஊழியராகவே வருகிறோம்.—'ஹரிஜன்'

ஏழைகள் பிழைக்க
கதரணியுங்கள்

யாத்ரா மார்க்கம்

"பாதமெங்கே, ஐயனே"

ஷோஹன்பூரில் பொதுக் கூட்டம் நடக்கையில் ஹர்ஜனங்களின் கோஷ்டியொன்று ஐயனைக்கண்டு தரிசிக்க வந்தது. கூட்டத்திலே ஒரு 60 வயதுக் கிழவன் இருந்தான். அவன் குருடன். "சுவாமீ, தங்கள் பாதமெங்கே யிருக்கிறது ?" என்று அவன் கேட்டான். காந்திஜீ தம் கையை நீட்டி "இதோ இருக்கிறது. பிடித்துக் கொள்ளும்" என்றார். தடவிப் பார்த்த குருடன் அது கையெனக் கண்டு "பாதமெங்கே ?" என்று மறுபடியும் கேட்டான். "பாதமெதற்கு ? கையைத் தருகிறேன். அதைப் பிடித்துக்கொள்ளும்" என்றார் காந்தி. கிழவன் பிடிவாதமாக "எனக்குப் பாதந்தான் வேண்டும். அதை நான் தொடவேண்டும்" என்றான். காந்திஜீயும் மனமிளகி, அவன் விருப்பத்திற்கு இணங்க வேண்டியதாயிற்று.

கிருஸ்தவர் செய்திகள்.

கிருஸ்தவர்களின் புது வருஷப் பிறப்பு நெருங்கி யிருப்பதால், உலகத்தின் நாலா திசையினின்றும் காந்திஜீக்கு வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்திருக்கின்றன. அநேகர் "தங்கள் கையெழுத்து வேண்டும்" என்று வேண்டியிருக்கிறார்கள். ஒரு அமெரிக்க ஆசிரியர் நீண்டதோர் கடிதம் எழுதி யிருக்கிறார். அதில் அவர் சொல்லி யிருப்பதாவது :—"உலகத்தின் மிகப் பெரிய மகான்களுள் ஒருவரெனத் தங்களை நான் மதித்திருக்கிறேன். தங்கள்போல் ஒரு மனிதர் அமெரிக்காவில் இருந்தால், அமெரிக்கா எவ்வளவு அருமையாய் வாழும் தெரியுமா ? நான் கடவுளுக்குப் பிரார்த்தனை புரியும்பொழுது தங்களுக்காகவும் பிரார்த்தனை செய்து கொண்டே யிருக்கிறேன். தாங்கள் அருள்மூர்த்தி. ஈசன் தங்களை ஆசீர்வதிப்பானாக !"

தமிழ்த் தலைவர்களுக்கு

பண்டித ஜவஹர்லால் டெல்லிக்கு விஜயம் செய்தபோது அந்த நகரின் பிரமுகர்களெல்லாம் தொண்டர் உடை அணிந்து அஸாப் அலியின் தலைமையின்கீழ் நின்று வரவேற்றனர். தயவு செய்து தென்னாட்டுப் பிரமுகர்கள் பாடங் கற்றுக்கொள்வார்களாக.

ஏலமும் நகையும்

(மகாத்மா காந்தி)

நான் பெண்கள் நகைகளைத் தானம் வாங்குவதையும், நன்கொடைகளை ஏலம் போடுவதையும் ஒரு பத்திரிகை கண்டித்திருக்கிறது. என் கூட்டங்களுக்கு வரும் ஆயிரக்கணக்கான ஸ்திரீகளும், தாங்கள் போட்டிருக்கும் நகைகளில் பெரும்பாலானவற்றை என்னிடம் கொடுத்துவிட வேண்டுமென்பதே உண்மையில் எனது ஆசை. நூற்றுக்கு 80 பேர் பட்டினியால் வாடும் இந்த நாட்டில், நகைகளணிந்திருப்போரைப் பார்த்தால் கண்ணை உறுத்துகிறது. இந்தியாவில் நகைதான் பெண்களின் சொத்து. அதையும்கூடத் தன் பதியின் சம்மதமின்றிக் கொடுக்கமாட்டார்கள்.

ஒரு நல்ல இயக்கத்துக்காக நகையைக் கழற்றிக் கொடுப்பதால், ஓர் பெண் உயர்வே யடைகின்றாள். மேலும், இந்த நகைகளாவது அழகாயிருக்கின்றனவா? அதுவுமில்லை. சில நகைகள் வெகு கோரமா யிருக்கின்றன; அழுக்கைக் குவித்துக்கொள்ளும் பாண்டங்களா யிருக்கின்றன. கொலுசு, கெட்டிச் சங்கிலிகள், கொண்டைத் திருகுகள் ஆகியவை இந்த ரகத்தைச் சேர்ந்தவைதான். கூந்தலைச் சீர்படுத்துவதற்காக ஏற்பட்ட தலையணிகளை, நாற்றமெடுத்த அசுத்தத்தை மறைக்கும் அணிகளாக உபயோகிக்கின்றார்கள். முன்கையிலிருந்து முழங்கை வரையில் அடுக்கடுக்காய் வளையல்களை அணிகிறார்கள். இப்படி ஆபரணங்களைப் போட்டுத் தேய்ப்பது தேசத்துக்கே நஷ்டமென்று நான் கருதுகிறேன். இந்த ஆத்ம பரிசுத்த இயக்கத்திற்குத் தங்கள் ஆபரணங்களைக் கொடுப்பது சமூகத்துக்கே பெரிய சேவையாகும். நான் ஒவ்வொரு சமயமும் தவறாமல் சொல்லும் நிபந்தனை யென்னவென்றால், கொடுத்த நகைக்குப் பதில் நகை செய்து போட்டுக் கொள்ளக் கூடாதென்பதுதான். தங்களை அடிமைப் படுத்தியிருந்த நகைகளை அகற்றும்படி நான் தூண்டியதற்காக, அநேகம் பெண்கள் என்னை வாழ்த்தி யிருக்கிறார்கள். தங்கள் வீடுகளில் எளிய வாழ்வைப் புகுத்தியதற்காக, அநேக ஆடவரும் எனக்கு நன்றி செலுத்தி யிருக்கிறார்கள்.

ஏலத்தைப்பற்றிச் சில வார்த்தை. இதில் ஒன்றும் தவறில்லை. இந்த ஏலத்தால் ஏற்படும் போட்டி ஆரோக்கியமானதாகும். ஒரு ஸ்திரீ அல்லது புருஷரின் தர்ம சிந்தையைத் தூண்டுவதற்கு, இது மாசற்ற ஓர் நல்ல வழியாகும். ஒரு மனிதன் தன்னிச்சையாகக் கொடுப்பதே ஒரு பொருளின் சரியான விலை. எனது ஏலங்களில் ஜனங்கள் அப்படி யொன்றும் மனம் போனபடி விலையை அள்ளிக்கொடுத்து விடுவதில்லை. வெகு உற்சாகமான கூட்டங்களில் கூட, ஏலத்தை உயர்த்த என்னால் முடியாமற்போன பல சமயங்கள் எனக்கு ஞாபகமிருக்கின்றன.

—“ஹரிஜன்”.

தமிழ்த் தொண்டு

(பாரதி தாஸன்)

எளிய நடையில் தமிழ் நூல் எழுதவேண்டும்.
இலக்கண நூல் புதிதாக இயற்ற வேண்டும்.
வெளியுலகில், சிந்தனையில் புதியவாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்கள் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடி செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்ய வேண்டும்.
எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லாமல்
இருப்பானேல் எல்லோரும் நாண வேண்டும்.

உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர் தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்.
தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்.
இலவச நூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்.
எங்கள் தமிழ் உயர்வென்று நாம் சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம்; குறை களைந்தோமில்லை.
தகத் தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்.

ஸ்வதேசியை ஆதரியுங்கள்
கள்ளிக்கோட்டை விஜிடபில் சோப்ஒர்க்ஸில்
தயார் செய்த மேன்மையான வாசனையுள்ள

மலபார் { லிலிரோஸ் சோப்
சந்தன சோப்
லிம்டா சோப்
(நீம்-வேப்)
டர்கிஷ்பாத் சோப் }

இந்த டாய்லட் சோப்புகள் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டியதவசியம். ஆரோக்கியத்திற்கும் திரேக சவுக்கியத்திற்கும் இவையே முதன்மையானவை.

எமது முக்கியமான சலவை சோப்புகள் :—

மலபார் சோப் &
நீலம் (இண்டிகோ) சோப்
நெ. 101. குஜராத் சோப்

எல்லா விடங்களிலும் கிடைக்கும்.

Props : சேட் நாக்ஜீ புருஷோத்தம் & கோ.
(of Sun Brand Umbrella Fame)
247, சைனாபஜார் ரோட், மதராஸ்.
(H. O, கள்ளிக்கோட்டை)

லண்டன்! லண்டன்!

(ஸ்ரீ காமாட்சி அம்மாள், பி. ஏ.)

நந்தனார் நாடகம் தமிழ் நாடகம். நந்தன் தமிழன்தான். அமெச்சூர் நடிகர்கள் எல்லாம் முதன் முதலில் நடிக்கும் நாடகம் நந்தனார்தான். ஏனெனில் அதில் பெண்பிள்ளை வேஷக்காரனுக்கு அதிக வேலை யில்லையல்லவா? தஞ்சாவூரில் சில பள்ளிக்கூட மாணவர்கள் சேர்ந்து நந்தனார் சரித்திரத்தை நடித்தார்கள். அன்று ஏராளமாக மாணவர்கள் நாடகத்திற்கு வந்திருந்தனர். கும்பகோணம், திருச்சினாப்பள்ளி முதலிய சுற்றுப்பக்க ஊர்களிலிருந்துகூட ஏராளமாக மாணவர்கள் வந்திருந்தனர். வருங்காலத்தில் இந்தத் தேசத்தில் பொறுப்பு வகிக்கப்போகும் புண்யவான்களல்லவா மாணவர்கள்?

தஞ்சாவூரில் சீதாராமய்யர் என்பார் ஒரு பிரமுகர். நல்ல சங்கீதமென்றால் ரஸிக்க வேண்டுமென்ற ஆசையுடையவர். அன்று அவர் முதல் சோபாவில் வந்து உட்கார்ந்து கொண்டிருந்தார். மேடைமீது நந்தன் வந்தான். "எல்லோரும் வாருங்கள்! சுகமிருக்குது பாருங்கள்!" என்ற பாட்டை கேதாரகௌள ராகத்தில் ஒரு ஜமாய் ஜமாய்த்து விட்டான். கிழவர் சீதாராமய்யர் பரம சந்தோஷமடைந்தார். நடிகன் சங்கதி போடப்போட, கிழவருடைய மண்டை உருண்டுகொண்டேயிருந்தது. வந்திருந்த மாணவர்களுக்கும் பாட்டு இனிமையாய்த்தானிருந்தது.

அடுத்தாற்போல நந்தன் "தோடுடைய செவியன்" என்ற தேவாரத்தைப் பாடும்போது சபையோர் மெய்மறந்து போயினர் என்று சொல்லலாம். பாட்டு முடியும் தருவாயில் மாணவரில் சிலர் "எக்ஸலெண்ட்" என்று அலறினர். சிலர் "ப்யூடிபுல்" என்று கூவினர். சிலர் "வெரிபைன்" என்று கத்தினர். சிலர் "ஒன்ஸ்மோர்" என்று இரைந்தனர். பலர் "காபிடல்! காபிடல்" என்று கதறினர்.

சீதாராமய்யருக்கு இந்தச் சந்தை இரைச்சலின்மீது, ஆத்திர மூண்டாயிற்று. நடிகன் 'மேல்பிருகாவில் என்னென்ன வேலை செய்வானென்று கூர்ந்து கவனித்துக்கொடிருந்தார் சீதாராமய்யர். பாட்டு காதில் கேட்காதவாறு மாணவர் கூட்டம் கூச்சலிட்டது அவருக்குப் பிடிக்கவில்லை. ஆகவே ஆத்திரத்தோடு ஆத்திரமாக அவர் மேடைமீது குதித்து ஏறினார். சபையோரைப் பார்த்து,

"லண்டன், லண்டன், லண்டன்!" என்று கூறிவிட்டு இறங்கினார்.

இந்த நிகழ்ச்சி சபையிலிருந்த மாணவர் பலருக்குக் கோபமூட்டிற்று. அவரைச் சிலர் சூழ்ந்துகொண்டு,

"ஏங்காணும் ஸ்க்ரூ லூஸோ?" என்றனர். சிலர் "கெட் அவுட்!" என்று கத்தினர்.

"ரீஸன் F-ஆர் ஹிஸ் மிஸ்பிஹேவியர், பிளீஸ்" என்று சிலர் கூவினர்.

ஆகவே ஸீதாராமய்யர் மேடைமீது மறுபடியும் குதித்து ஏறினார். கையைத் தூக்கினார். எங்கும் நிச்சப்தம். பேசினார்.

"ஸ்வாரஸ்யமாகத் தமிழ்த் தேவாரத்தைப் பாடிக்கொண்டிருந்தபோது ஏதேதோ இங்கிலீஷ் வார்த்தைகளையெல்லாம் சொல்லிப் பாட்டைக் குட்டிச் சுவராக்கி விட்டார்கள். உங்கள் வார்த்தைகளெல்லாம் இங்கிலாந்திலிருந்து இறக்குமதியானவை. கடைசியில் யாரோ ஒருவர் "காபிடல் காபிடல்" என்று கத்தினார்; இங்கிலாந்துக்குக் காபிடல் லண்டன். ஆகையால் நான் லண்டன்! லண்டன்! என்று பகிரங்கமாகப் பதில் சொன்னேன்" என்றார்.

ஆஸ்தையும் அன்பும்

"ஆதிகாலத்திலிருந்தே இந்தியாவிடம் பிரஞ்சுக்காரர்களாகிய நாங்கள் ஆஸ்தை கொண்டிருக்கிறோம்" என்று கர்னல் போனார்ட் என்ற பிரஞ்சு வியாபாரக் கமிஷனர் லாகூரில் பேசியிருக்கிறார். இந்தியாவிடம் இந்தப் பிரஞ்சுக்காரருக்கு இவ்வளவு ஆஸ்தை இருப்பானேன்? 'இந்தியாவில் வெள்ளைக்கார ராஜாங்கத்தை ஸ்தாபிக்கலாம்' என்று முதன் முதலில் கண்டு பிடித்தவன் தூப்ளே. அவனும் ஒரு பிரஞ்சுக்காரனே. யோசனை அவனுடையதாயினும் சுக்ரதசை இங்கிலீஷ்காரனுக்கு அடித்தது. இந்தியா பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சேர்க்கப்பட்டது. ஆஸ்தை யிருப்பதாகவும் அன்பு காட்டுவதாகவும் கூறுகின்ற அந்நிய நண்பர்களுக்கு அநேகங்கோடி வந்தனம். இந்தியாவில் என்னென்ன ஓட்டை உடைசல் மினுக்குத் தளுக்கு சாமான்களை விற்றுப் போடலாம் என்ற அந்தரங்க எண்ணமில்லாமல் இவர்களுக்கு ஆஸ்தை ஏற்பட்டிருக்கிறதா?

கூலிக்கு மாரடியா?

தம்பிரானுக்கு ஆண்டியிடம் கோபம். ஆண்டிக்குத் தம்பிரானிடம் ஆத்திரம். சடைக்குள் தம்பிரானும், சொம்பில் ஆண்டியும் பவுன் பவுனாய்ப் பணத்தை ஒளித்து வைத்து, வெளிக்குச் சகலமும் துறந்த பரமபாகவதர்களாக நடித்து வந்தார்கள். கோபம் வந்த தம்பிரான் "சிவ சிவ செம்பொற் சோதி" என்பதை "சிவ சிவ சொம்பைச் சோதி" என்று உச்சரித்தான். ஆண்டியோ வெட்ட வெளிச்சமாக, "தம்பிரான் சடையைப் பார்" என்று இரகஸ்யத்தைப் போட்டுடைத்தான். குட்டு வெளிப்பட்டு விட்டது. இந்தக் கதைமாதிரியே, சில சமயங்களில் பெரிய சங்கதிகளின் சாயமும் வெளுத்து விடுகிறது.

இந்தியச் சட்டசபை அங்கத்தினருக்குச் 'சம்பளம்' தேவலையா, 'படி' தேவலையா என்று ஒரு கேள்வி கிளம்பியிருக்கிறது. இப்படிக் கிளம்பும் பொழுதுதானே சில ரகஸ்யங்கள் வெளியாவது வழக்கம். படி என்பதனால், சில பேர்வழிகள் சட்டசபை நடை முறைகளை எவ்வளவு இழுத்துக் கொண்டிருக்க முடியுமோ அவ்வளவும் இழுத்துக்கொண்டிருக்க முயல்கிறார்களாம். இவ்வளவுதான் சம்பளம் என்று சொல்லிவிட்டால், வெகு ஜரூராயிருப்பார்களாம். அதாவது சர்க்கார் சொல்வதற்கெல்லாம் கொஞ்சம் கூட யோசியாமல் "ஆமாம், சாமீ" போட்டுவிட்டு, போனதும் வந்ததுமாய் ஊருக்குத் திரும்புவார்கள் போலும்!

எப்படி யிருந்தாலும் சரி, இந்த மாதிரி பேச்சுக்கள் கிளம்பியிருப்பதே வெகு விரஸம் என்று மாத்திரம் நமக்குத் தெரிகிறது. இந்தப் பேச்சுகளில் எது சரியா யிருந்தாலும், சட்டசபை அங்கத்தினரைக் "கூலிக்கு மாரடிப்பவர்கள்" என்று அல்லவோ அர்த்தம் செய்யவேண்டியதா யிருக்கிறது. அப்படியானால், "ஹா! நாங்கள் தேசத்தை ஒரே யடியாகப் புனருத்தாரணம் செய்வதற்கன்றோ சிம்லா மலையிலும் டில்லி மாளிகையிலும் போய் உட்கார்கிறோம்" என்று பல மெம்பர் ஜம்பமடித்துக் கொள்ளுவதெல்லாம் ஒரே "ஹம்பக்"கா?

ஆறில் ஒரு பங்கு

கவி சுப்பிரமணிய பாரதியார் எழுதிய சிறு கதை

[பூர்வ கதை:—கதா நாயகனுக்கு ராவ் பகதூர் சுந்தரராஜுலு நாயுடு என்னும் வைதீகரின் பெண் மீனும்பாளிடம் காதல். தந்தை தன்னை வேறு ஒருவனுக்கு மணக்க முயல்வதைக் கண்டு, கனவில் காளி தேவி காட்டிய பச்சிலையை உண்டு தான் உயிர் துறக்கப் போவதாக அவளிடமிருந்து கடிதம் வருகிறது. இதைக் கண்டதும் கதாநாயகன் காஷாயம் பூண்டு வட தேச யாத்திரை செல்லுகிருன். தீண்டா வகுப்பினருக்குச் சேவை செய்து வந்த அசுவினி பாபுவைப் பார்க்க, பாரிஸால் செல்லுகிருன். மீனும்பாள் பச்சிலை தின்றதால் காய்ச்சல் வந்து மணம் தடைப்பட்டதாகவும், அவளும் வடநாடு வந்து ஏழைகளுக்குச் சேவை செய்து "தீனமாதா" என்ற பெயர் வாங்கியிருப்பதாகவும், இப்பொழுது குளிர் ஜ்வரத்துக்கு ஆளாகியிருப்பதாகவும், அசுவினிபாபு அவளைக் காசிக்கு அழைத்துச் சென்றிருப்பதாகவும் கேள்விப்படுகிருன். உடனே அங்கிருந்து தானும் காசிக்குப் பயணமாகிருன்.]

அத்தியாயம் 5

காசியில் ஹனுமந்த கட்டத்திலே எனக்குத் தெரிந்தவர்களிருக்கிருர்கள். எனது நண்பர் ஒருவருடைய பந்துக்கள் அங்கு வாசம் செய்கின்றனர். இதைப் படிக்கும் தமிழர்கள் காசிக்குப் போயிருப்பதுண்டானுல், நான் சொல்லப்போகிற இடம் அவர்களுக்குத் தெளிவாகத் தெரியும். தமிழர்களெல்லோரும் பெருபாலும் ஹனுமந்த கட்டத்திற்கே போய் இறங்குவதுண்டு. அங்கு, கீழ்மேற் சந்து ஒன்றிருக்கிறதல்லவா ? அதில் கீழ் மேற்கு மூலையிலிருந்து மூன்றும் வீடு. அந்த வீட்டிற்குச் சிவ மடம் என்று பெயர். யாத்திரைக்காரர்கள் போய் இறங்கக்கூடிய வீடுகளைக் காசியிலே மடங்கள் என்கிருர்கள். சிவ மடத்தில் போய் இறங்கி ஸ்நாநம் செய்துவிட்டு, மடத்தார் கொடுத்த ஆகாரத்தை உண்ட பிறகு, அப்பொழுதே அந்த மடத்துப் பிள்ளைகளில் ஒருவரைத் துணைக்கழைத்துக்கொண்டு நர்வா கட்டத்திற்குப் போனேன். அங்கே தாய்ப்பூர் ராஜா பங்களா எது என்று விசாரித்து பங்களாவிற்குப் போய்ச்சேரும் போது இரவு ஏழு மணியாகிவிட்டது. வாயிலில் ஒரு குதிரை வண்டி வந்து நின்றது. அந்த வண்டி புறப்படுந்தருவாயிலிருந்தது. வண்டியின் மேல் ஆங்கிலேய உடை தரித்த ஒரு வங்காளி உட்கார்ந்து கொண்டிருந்தான். வண்டிப் பக்கத்திலே ஒரு கிழவரும் வேறு சிலரும் நின்றுகொண்டிருந்தார்கள். அசுவினி குமார தத்தரின் சித்திரத்தை நான் பல இடங்களில் பார்த்திருக்கிறபடியால் இந்தக் கிழவர்தான் அசுவினி பாபு என்று தெரிந்துகொண்டேன். நான் போனவுடனே அசுவினிபாபு பக்கத்திலிருந்த மனிதனை நோக்கி, "யாரோ ஒரு ஸந்யாஸி வந்திருக்கிருர். அவரைத் தாழ்வாரத்தில் வரச் சொல். நான் இதோ வருகிறேன்" என்ருர். தாழ்வாரத்தில் போட்டிருந்த இரண்டு நாற்காலிகளில் நானும் என்னுடன் வந்திருந்த வாலிபனும் போய் உட்கார்ந்தோம். அசுவினி பாபுவும் வண்டிக்குள்ளிருந்தவரும் பேசியது என் செவியில் நன்ருக விழுந்தது.

அசுவினி பாபு:—"டாக்டர் ஸாஹப்! நேற்றைக் காட்டிலும் இன்று சிறிது குணப்பட்டிருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது, தமது கருத்தென்ன!"

டாக்டர்:—"மிகவும் துர்ப்பல நிலையிலே தானிருக்கிருள். இன்னும் இருபத்து நான்கு மணிநேரம் இருப்பது கஷ்டம். அந்த நேரம் தப்பினுல், பிறகு விபத்தில்லை" என்ருர்.

காதில் விஷந் தடவிய தீயம்புபோல இந்த வார்த்தை கேட்டது. "மீனு! மீனு! மீனு!' என்றலறினேன். வண்டி புறப்பட்டு விட்டது. அதற்குள் நான் என்னை மீறி அலறிய சத்தம்கேட்டு அசுவினி பாபுவும் அவரைச் சேர்ந்தவர்களும் நான் இருந்த பாரிசமாக விரைந்து வந்தார்கள். அவர் வருதல் கண்டு, நான் மனதை ஒருவாறு தேற்றிக்கொண்டு எழுந்து நின்று வணங்கினேன். அவர், "ஸ்வாமிக்கு எவ்விடம்? இங்கு வந்த கருத்தென்ன? ஏன் சத்தம் போட்டீர்கள்" என்று ஹிந்துஸ்தானி பாஷையிலே கேட்டார்.

"பாபு, நான் ஸந்யாஸி யல்ல. நான் திருடன். நான் மஹா நிர்ப்பாக்கியமுடைய பாவி. மீனுப்பாள் தம்மிடம் கோவிந்தராஜன் என்றபெயர் சொல்லியிருப்பாளல்லவா? அந்தப் பாவி நான் தான்" என்றேன்.

உடனே என்னை அவர் மேன்மாடத்திலுள்ள ஒரு அறைக்குத் தனியாக அழைத்துச் சென்ருர். அங்கு என்னை நோக்கி, "நேற்றெல்லாம் நான் உம்மை அடிக்கடி நினைத்துக்கொண்டிருந்தேன். நீர் இங்கு வரக்கூடுமென்ற சிந்தனை எனக்கு அடிக்கடி தோன்றிக்கொண்டிருந்தது" என்ருர்.

பிறகு என்னிடம் "கிழக்கு முகமாகத் திரும்பி உட்காரும்" என்ருர். அப்படியே உட்கார்ந்தேன். "கண்ணை மூடிக்கொள்ளும்" என்ருர். இரண்டு கண்களையும் மூடிக் கொண்டேன். பிறகு எனது நெற்றியைக் கையால் தடவி ஏதோ முணுமுணுத்துக்கொண்டிருந்தார். எனக்கு உறக்கம் வருவது போலிருந்தது. "அடடா! இன்னும் மீனும்பாளைப் பார்க்கவில்லை. எனது உயிரினு மினியாள் மரணவஸ்தையிலிருக்கிருள். அவளைப் பார்க்கு முன்பாக உறக்கம் வருகிறதே. இவர் என்னை ஏதோ மாய மந்திரத்துக்குட்படுத்துகிருர். எனது பிராண ரத்னத்தைப் பார்க்காதபடி கெடுத்துவிட முயலுகிருர். இந்த மாயைக் குட்படலாகாது. கண்விழித்து எழுந்து நின்றுவிடவேண்டும்" என்று சங்கற்பஞ் செய்துகொண்டு எழுந்து நிற்க முயன்றேன். 'ஹூம்' என்ருெரு சத்தம் கேட்டது. விழித்து விழித்துப் பார்க்கிறேன்; திறக்க முடியவில்லை. மயக்கம் மேன் மேலும் அதிகப்பட்டது. அப்படியே உறங்கி விழுந்துவிட்டேன்.

* * *

விழித்த பிறகு, நான் இரண்டு நாள் உறங்கிக் கிடந்ததாகத் தெரிந்தது. பக்கத்திலிருந்த ஒரு சேவகன் சொன்னுன். "மீனு எங்கே? மீனு சௌக்கியமா யிருக்கிருளா?" என்று அந்தச் சேவகனிடம் கேட்டேன். "எனக்கு

ஒன்றுமே தெரியாது" என்று மறுமொழி கூறினேன். சாதாரணமாக எப்போதும்போல இருந்தேனாயின், அந்தச் சேவகனை உதைத்துத் தள்ளி, இடையே வந்தவர்களை யெல்லாம் வீழ்த்திவிட்டு மீனாளிருக்குமிடம் ஓடியே போய்ப் பார்த்திருப்பேன். ஆனால் இந்த நேரம் என்னுடலில் மிகுந்த அயர்வும், உள்ளத்தில் மிகுந்த தெளிவும் அமைதியும் ஏற்பட்டிருந்தன. மனதிலிருந்த ஜ்வரம் நீங்கிப் போயிருந்தது. பாரிஸால் கிழவன் செய்த சூதென்று தெரிந்துகொண்டேன். அரை நாழிகைக்கெல்லாம் அசுவினி பாபு தாமே நானிருந்த அறைக்குள் வந்து என் எதிரே ஒரு நாற்காலியின் மீது வீற்றிருந்தார். என்னை அறியாமல், எனது இரண்டு கைகளும் அவருக்கு அஞ்சலி புரிந்தன.

"ஓம்" என்று கூறி ஆசிர்வாதம் செய்தார். "பால ஸந்யாசி, கபட ஸந்யாசி, அர்ஜுன ஸந்யாசி, உன் பக்கம் சிட்டு விழுந்தது" என்றார். மீனா பிழைத்துவிட்டாள் என்று தெரிந்துகொண்டேன்.

"முற்றிலும் சௌக்கியமாய் விட்டதா?" என்று கேட்டேன்.

"பூரணமாக சௌக்கியமாய் விட்டது. இன்னும் ஓரைம்பது வருஷத்திற்கு ஸமுத்திரத்திலே தள்ளினாலும் அவளுக்கு எவ்விதமான தீங்கும் வர மாட்டாது" என்றார்.

"அப்படியானால் நான் போகிறேன். அவள் இறந்து போகப் போகிறாளென்ற எண்ணத்தினாலேதான் என் விரதத்தைக்கூட மறந்து, அவளைப் பார்ப்பதற்காகப் பறந்தோடி வந்தேன். இனி அவளைப் பார்த்து அவளுடனிருக்கவேண்டுமென்ற எண்ணம் எனக்கில்லை. நான்போய் வருகிறேன்" என்று சொன்னேன்.

அசுவினிபாபு கடகடவென்று சிரித்துவிட்டுப் பக்கத்திலிருந்த சேவகனை நோக்கி, "இவருக்குக் கொஞ்சம் பால் கொணர்ந்து கொடு" என்று ஏவினார். அவன் முகங் கழுவ நீரும், அருந்துதற்குப் பாலும் கொணர்ந்து கொடுத்தான். அசுவினி குமாரர் அந்தப் பாலை விரலால் தீண்டி என்னிடம் கொடுத்தார். அந்தப் பாலை உட்கொண்டவுடனே, திருக்குற்றாலத்து அருவியில் ஸ்நானம் செய்து முடித்ததுபோல், எனது உடலிலிருந்த அயர்வெல்லாம் நீங்கிப்போய் மிகுந்த தெளிவும் சௌக்கியமும் அமைந்திருக்கக் கண்டேன்.

"இப்பொழுதென்ன சொல்லுகிறாய்? புறப்பட்டுப் போகிறாயா?" என்று அசுவினிபாபு புன்னகையுடன் கேட்டார்.

"அவளை ஒரு முறை பார்த்துவிட்டு, அவளிடம் விடை பெற்றுக்கொண்டு செல்லுகிறேன்" என்றேன்.

திடீரென்று அசுவினி பாபுவின் முகத்தில் இருந்த புன்னகை மாறி சிரத்தா ரூபம் தோன்றியது. அப்பால் என்னிடம், "மகனே, நீ மீனம்பாளை மணஞ் செய்துகொள்வாய். நீங்களிருவரும் சேர்ந்து வாழ்ந்து, முற்காலத்தில் ரிஷியும் ரிஷி பத்தினியுமாக வேத யக்ஞம் செய்ததுபோல, உங்கள் வாழ்நாள் முழுதும் மாதாவுக்குப் பிரீத்யர்த்தமாக ஜீவயக்ஞம் புரியக் கடவீர்கள்" என்றார்.

"காளிதேவியின் கட்டளை என்னாகிறது?" என்று கேட்டேன். இந்த ஜன்மத்திலே 'நீ கோவிந்த ராஜனை மணஞ் செய்துகொள்ள லாகா'தென்று காளிதேவி மீனாளுக்குக் கூறி, அவளை விஷந் தின்னும்படியாகக் கட்டளையிட்ட செய்தியை அவருக்கு நினைப்புறுத்தினேன்.

அதற்கவர், "அந்தச் செய்தியெல்லாம் நானறிவேன். மஹா சக்தியின் கட்டளையை மீனம்பாள் நன்கு தெரிந்துகொள்ளாமல் உனக்குக் கடிதமெழுதிவிட்டாள். மீனம்பாளுடைய ஜன்மம் மாறுபட வேண்டுமென்று அம்மை சொல்லியதன் பொருள் வேறு. அவள் பச்சிலை தின்னும்படி கட்டளையிட்டது மீனம்பாளுக்கு ஜ்வரமுண்டாய்த் தந்தை யெண்ணிய விவாகம் தடைப்படும் பொருட்டாகவேயாம். அதற்கு முன்பு அவளுடைய ஜன்மம் வேறு. அதற்கப்பால் அவளுடைய ஜன்மம் வேறு. மாதா தெளிவாகத்தான் சொல்லினள். ஆனால் மீனாள் தனக்கு வேண்டாத ஒருவனுடன் விவாகம் நடக்கப் போகிறதென்ற தாபத்தால் படபடப்புண்டாகி, உனக்கேதெல்லாமோ எழுதிவிட்டாள். நீயும் அவசரப்பட்டுக் காஷாயந் தரித்துக்கொண்டு விட்டாய். உனக்கு ஸந்யாஸம் குருவினால் கொடுக்கப்படவில்லை. ஆயினும், இதுவெல்லாம் உங்களிருவருடைய நலத்தின் பொருட்டாகவே ஏற்பட்டது. உங்களிருவருக்கும், பரிபூரணமான ஹிருதய சுத்தி உண்டாவதற்கு இப்பிரிவு அவசியமாயிருந்தது. இப்பொழுது நான் போகிறேன். இன்று மாலை நான்கு மணிக்குப் பூஞ்சோலையிலுள்ள லதா மண்டபத்தில் மீனம்பாள் இருப்பாள். உன் வரவிற்குக் காத்திருப்பாள்" என்று சொல்லிப் போய்விட்டார்.

மாலைப் பொழுதாயிற்று. நான் ஸந்யாசி வேஷத்தை மாற்றி, எனது தகுதிக்குரிய ஆடை தரித்துக்கொண்டிருந்தேன். பூஞ்சோலையிலே லதா மண்டபத்தில் தனியாக நானும் எனது உயிர் ஸ்திரீ ரூபம் கொண்டு பக்கத்தில் வந்து வீற்றிருப்பதுபோலத் தோன்றியவளுமாக இருந்தோம். நான்கு இதழ்கள் கூடின. இரண்டு ஜீவன்கள் மாதாவின் ஸேவைக்காக வயப்பட்டன. பிரகிருதி வடிவமாகத் தோன்றிய மாதாவின் முகத்திலே புன்னகை காணப்பட்டது.

வந்தே மாதரம்.

மகாத்மா காந்தி எழுதிய

நூல்கள்

	ரூ.	அ.	பை.
இல்லறமும் பிரும்மசரியமும்	0	6	0
மகா தியாகம்	0	4	0
அனசக்தி யோகம்	0	4	0
ஹிந்து தர்மம்	0	2	0
கீதா போதனை	0	2	0
உத்தம வாழ்க்கை	0	2	0
ஆரோக்கிய வழி	0	4	0
நீதி தர்மம்	0	2	0
சத்திய சோதனை முதற் பாகம் ...	1	8	0
சத்திய சோதனை இரண்டாம் பாகம்	2	0	0

ஹரிஜன மலர்கள் (மகாத்மா ஹரிஜன விஷயமாக வெளியிட்ட அறிக்கைகளின் மொழி பெயர்ப்பு)

	ரூ.	அ.	பை.
ஹரிஜன சேவை	0	0	6
ஹரிஜனத் தொண்டு	0	0	6
ஹரிஜனப் பணி	0	0	6
ஹரிஜன விமோசனம்	0	0	6

சுதந்திரச்சங்கு புத்தகசாலை
பைக்கிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, சென்னை.



மகாராஜபுரம் விசுவநாதய்யர்

(ஈ. கிருஷ்ணையர்)

சங்கீதம் அழகுக் கலை. அக் கலையில் தொழில் செய்யும் அநேக வித்வான்களுக்கோ உடல் அழகு இருப்பது அபூர்வம். ஆனால் அழகுக் கலைக்கேற்ப அழகான ஸௌந்தர வடிவமும் கொண்டவர் மகாராஜபுரம் விசுவநாதய்யர். வயது சுமார் 37; நல்ல நிறம்; வாட்ட சாட்டமான தேகக் கட்டு; வசீகர முகம். மொத்தத்தில் அலங்கார புருஷன் அவர். புன்முறுவலுடன் நயவார்த்தை. எளிதில் மயக்கும் பாவனை. வேறென்ன வேண்டும்? மஹாராஜபுரத்தில் பிறந்து, உமையாள்புரம் ஸ்வாமிநாதய்யரிடம் சங்கீதம் பயின்று, பழனி ரங்கப்பய்யரிடம் நெருங்கிப் பழகி, கோனேரிராஜபுரம் வைத்தியநாதய்யர் பாட்டில் பெரு மோஹமுங் கொண்டு 'கேள்வி ஞான'த்தை அள்ளிக் கொண்டவர் விசுவநாதய்யர். சுமார் 20 வருஷ காலமாய்க் கச்சேரி செய்து வருகிறார். மங்காத புகழும், மாசற்ற கலையும் தொடந்தாற்போல அவருடைய வாழ்க்கையில் காணப்படுவதில்லை. சில காலம் வரை நல்ல வியாபகத்துடனிருப்பதும், ஏதேதோ காரணங்களால் அவ்வப்போது குன்றுவதும், பிறகு வளருவதுமாக அவரது கீர்த்தியும் கலையும் இருந்து வருகின்றன. சங்கீத உலகத்தில் அநேக வித்வான்கள் இவ்வாறு இருந்திருக்கிறார்களன்றோ?

அவரது சங்கீதத்தை நன்கு அறிய வேண்டுவோர் சுமார் 7 வருஷங்களுக்கு முன்னர் அவர் கச்சேரியைக் கேட்டிருக்க வேண்டும். அப்போது அவரது சாரீரம் வெகு கம்பீரமாயிருந்தது. அதற்கேற்ற போதிய ஞான பாவமுமுண்டு; அழுத்தமான பிடிப்புகளோடு அலங்காரமான ரவை ஜாதிகளுமுண்டு. உருப்படிகளும் அதிகமாகக் கையாளுவது அவர் வழக்கம். விசேஷமான பாணி இல்லாதிருப்பினும் சில சில குறிப்பிடத்தக்க அம்சங்களை அவரிடம் ரஸிகர் கண்டிருக்கின்றனர். நுட்பமான குழைவுகளும், கமகங்களும், அவரிடம் நிறைந்திருந்தன. சாரீரம் நல்ல ஸாதகத்துடன், தன்னிஷ்டத்துக்கு அடங்கி வேலை செய்யக்கூடியதாயுமிருந்தது. 'எந்தரா நீதனு' என்ற கீர்த்தனையை அன்று கேட்டது இன்றும் ரஸிகரால் மறக்க முடியாது. 'தாரிணி தெலுஸு கொண்டி' 'புவினி தாஸுடனே' 'ஸீதம்ம மாயம்ம' முதலிய கீர்த்தனைகளும் கேட்கத் தகுந்தன. ஆலாபனைகளில் 'தோடி', 'குந்தலவராளி', 'ரீதிகௌள', 'உசேனி', 'புன்னாகவராளி' முதலியவைகள் அவரிடம் விசேஷம். தாளத்திலும் ஸ்வரத்திலும் நல்ல பயிற்சி. ஸ்வரப்ரஸ்தாரங்களில் மனோ தர்மங் கொண்ட நுண்ணிய ஸஞ்சாரங்களும், ஸாமர்த்தியப் பிடிகளும் செய்து காட்டக் கூடியவர். மொத்தத்தில் மத்திய கால நடைகளை அவர் சித்தரிப்பது வெகு அழகு கொண்டதாயிருக்கும். சிலர் அதைக் குதிரை நடையென்றும் சொல்வார்கள். ஸ்வர தாளங்களில் ஸாமர்த்தியமுள்ளோர் செப்படி வித்தைகள் செய்யாது இருக்கமாட்டார்கள். விச்வநாதய்யரும் அந்த வித்தையில் கைதேர்ந்தவர்.

அவரது சாரீரம் ஸௌகரியமாயிருந்த வரை இவையெல்லாம் எல்லோரும் எப்போதும் அனுபவிக்கக் கூடிய இனிய ஸங்கீதமாகவே யிருந்தன. இப்போதுள்ள விச்வநாதய்யர் அக்காலத்தைப் போலில்லை யென்றால் சில வருஷங்களுக்கு முன் கண்ட சாரீர அஸௌக்கியத்தினால் சாரீரம் கெட்டது ஒரு காரணமாகும். இப்போதும் ஞான பாவத்துக்கும், மனோ தர்மத்துக்கும் குறைவில்லை. மேல் ஸட்ஜத்தில் கார்வை கொடுக்கும்போது இன்னும் இனிமையாகவே யிருக்கிறது. ஆனால் மனித சாரீரம் எப்போதும் நம்பக்கூடியதா? மேல் ஸ்தாயியில் தொண்டை 'மக்கர்' பண்ணுகிற சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன. மொத்தத்தில் அவர் ஸங்கீதம், ஓரிடம் 'ஆஹா' என்று புகழக் கூடியதாயும் அடுத்தாற் போல் மற்றோரிடம் 'ஏது இப்படி' என்று கேட்கக் கூடிய விரஸமுள்ளதாகவும் கலந்தே யிருக்கிறது. ஆயினும் பரவாயில்லை. ஏனெனில் அவருக்கு வயது அதிகமாக வில்லையாதலால் சாரீரம் இன்னும் சரிப்படுவதற்கு இடமுண்டல்லவா? இழந்த அம்சங்களில் சிலவற்றை அவர் பெற்றே தீருவாரென ரஸிகர் எண்ணிக் கொண்டிருக்கின்றனர்.

அத்துடன் கச்சேரி பாணியை விச்வநாதய்யர் அதிகம் கவனிக்க வேண்டுமென்று தோன்றுகிறது. சில அம்சங்களை அதிகம் வளர்த்தி மற்றவைகளைக் குறுக்குகிறார். ஒவ்வொரு கீர்த்தனைக்குப் பின்னும் ஸ்வரம் பாடும்போது சில தடவைகளில் மிதமிஞ்சியும் பாடி விடுகிறார். ஒரு உருப்படியின் பல்லவியையும் அனுபல்லவியையும் சட்டென முடித்து விஸ்தாரமாய் ஸ்வரம் பாடி, பிறகு சரணத்தை யெடுக்கும் வழக்கம் இவரிடம் அதிகம் இருப்பதைக் குறிப்பிடாமலிருப்பதற்கில்லை. தவிர கச்சேரி மொத்தம் 4½ மணி நேரமானால் 3 மணி நேரத்துக்குமேல் கீர்த்தனைகளாயிருக்கும். மற்றவை சுருக்கமும் ஒட்டடமுமாகத் தான் காணப்படும். இவ் விஷயங்களில் அவருக்கு விதரணை தெரியாது என்று நினைப்பதற்கில்லை. இயற்கையோடு செயற்கை ஸாதகத்தினால் இளவயதிலேயே சங்கீத உலகில் ஒரு கீர்த்தி வந்து விட்டதானால் அதிக ஸாமர்த்தியம் காட்டும் பொருட்டு, ஸங்கீதத்தில் உண்மையாய் அனுபவிக்கக் கூடிய ரஞ்சக அம்சங்களும் பாணியும் அவ்வளவு அவசியமில்லை என்று நினைக்கும் மனப்பான்மை சில வித்வான்களிடம் வளருவதுண்டு. அதன் காரணமாகவோ, அல்லது சாரீர இடைஞ்சலான குறைகளை மறைப்பதற்காகவோ விச்வநாதய்யர் மேற்படி வழிகளைக் கொண்டிருக்கிறாரோ என்று சிலர் ஐயுறுவதுண்டு. இவை போன்ற விபரீத ருசியை விலக்கினால் அவர் ஸங்கீதம் இன்னும் மேம்படுவதற்குத் தடையேதுமிருக்குமென்று தோன்றவில்லை. பாடும்போது, விசுவாதய்யரிடம் உடல் விகாரங்கள் அதிகமில்லை. சில சமயங்களில் சரியாய் வெளிப்படுத்த முடியாத நாதங்களையோ, ஸங்கதிகளையோ குறிப்பிடும்படி கை வீச்சுக்கள் மட்டுமே காணப்படுகின்றன. சிறிது காலம் பெயர் மங்கியிருந்த போதிலும் மறுபடியும் வெளிவந்திருக்கும் அவரை ரஸிகர் கேட்டே தீர வேண்டும். அன்பர்கள் காட்டும் ஆதரவின் பயனாக விசுவநாதய்யர் உத்ஸாகமூட்டப் பெற்றால் குறை சிறிதுமில்லாத இசை விருந்து அவரால் அளிக்கக் கூடுமன்றோ!

பாலர் பகுதி

ஆண்டியும் அம்மையாரும்

("மார்க்கண்டேயன்" எழுதுவது)

அம்மையாரின் வீட்டுக்கு
  ஆண்டி ஒருத்தன் வந்து நின்றான்.
அவள் வீட்டு வாசலிலே
  மல்லாக்கப் படுத்துக் கொண்டான்.
"போடா ஆண்டி!" என்றாளாம்.
  போகமாட்டேனென்று சொன்னான்.
அம்மையாரும் பார்த்தாள்
  அவனை வெருட்டுதற்கு.
தெருவில் வந்து பார்த்தாளாம்
  தெரிந்தவர்களுண்டோ என்று.
நாக்கைத் தொங்கப் போட்டுக்குனு
  நாயொன்று வந்ததுவே.
"நாயே நாயே வந்து குலை;
  ஆண்டியையே ஓட்டு" என்றாள்.
நாடி வந்த அந்நாயும்
  "போடி போக்கி!" என்றதுவே.
அது கண்டு அம்மையாரும்
  அங்கிருந்த தடியை நோக்கி
"தடியே! தடியே! நீ அடித்திடுவாய்
  நாயை!" யென்றாள்.
நாயடிக்க மாட்டேனென்று
  தடியும் மறுத்து விட
நெறுக்கென்று பல் கடித்து
  நெருப்பண்டை வந்து நின்றாள்.
"தீயே! தீயே தீய்த்திடுவாய்
  நீ தடியை" யென்றிடவே
"கொளுத்த மாட்டேன்" என்றந்த
  குண்டாந்தடி சொல்லிடவே
தண்ணீரண்டை சென்று நின்று
  "தீயை அவி" என்று சொன்னாள்.

"நான் மாட்டேன்" என்றந்த
  நல்ல தண்ணீர் சொல்லிடவே
ஆடொன்றைக் கண்டு
  அம்மையாரும் சென்று சொன்னாள்:
"ஆடே அந்தத் தண்ணீரை
  அப்படியே குடி" என்றாள்.
"ஓடிவிடு இல்லாவிடின்
  உதைப்பேன்" என்றது ஆடு.
அங்கொரு தும்பு
  அறுந்து கிடந்ததுவே.
"தும்பே! ஆட்டைக் கட்டிவிடு"
  என்றாளது ஒப்பவில்லை.
எலியொன்று ஓடக்கண்டு
  "இங்கே வா" என்றாளாம்.
"சின்னஞ்சிறு எலியே
  கயிற்றைக் கடித்துவிடு"
என்றாளாம் அம்மையாரும்.
  எலி 'மாட்டேன்' என்றிடவே
கோபங் கொண்டு அம்மையாரும்
  பூனையண்டை சென்று சொன்னாள்:
"பூனையாரே! பூனையாரே!
  பூத்தருவேன் பூனையாரே!
ஆண்டி வந்து நின்றான்.
  அவன் போக மாட்டேனென்றான்.
நாயும் கடித்திடவே
  மாட்டேனென்று சொல்லிடவே.
நாயடிக்கும் தடியும்
  நான் மாட்டேன் என்றதுவே
தடியெரிக்கும் தீயும்
  தட்டிவிட்ட தென்ன செய்வேன்?

நெருப்பவிக்கும் நீரு மென்னை
  நீ போடி என்றதையா.
நீரைக் குடித்திடவே
  நீச ஆடு மறுத்திடவே
ஆரைக் கயிற்றை
  அதைக்கட்டக் கேட்டுநின்றேன்.
அதுவும் மறுத்ததையா.
  அப்புறம் கேளும் கதையை.
கயிறறுக்கும் எலியும்
  கடிக்கமாட்டேன் என்றதையா.
பூனையாரே எலிதன்னை
  தண்டிக்க வேண்டாமா!"
என்றாளாம் அம்மையாரும்.
  எகிறினாளும் பூனையாரும்.
கயிற்றைக் கடிக்கவே
  எலியும் ஓடிற்றாம்.
ஆட்டைக் கட்டவே
  கயிறும் ஓடிற்றாம்.
நீரைக் குடிக்கவே
  ஆடும் ஓடிற்றாம்.
தீயை அவிக்கவே
  நீரும் ஓடிற்றாம்.
தடியை எரிக்கவே
  தீயும் ஓடிற்றாம்.
நாயை யடிக்கவே
  தடியும் ஓடிற்றாம்.
ஆண்டியை ஓட்டவே
  நாயும் ஓடிற்றாம்.
எடுத்தானாம் ஆண்டி ஓட்டம்
  எண்பது மைல் ஒரு மணியில்
அம்மையாரும் உள்ளே போய்
  ஆப்பம் பண்ணித் தின்றாளாம்.



தமிழ் அன்பர் மகாநாடு

(கண்டவன் கூறுவது)

தமிழன்பர்கள், தமிழர்கள் அனை வரும் ஒன்றுகூடி, ஒரு வழியாக இந்த மகாநாட்டை நடத்தித் தீர்த்துவிட்ட னர். இதற்குப் பின்னர் ஓரங்குலமா வது தமிழ் உயர்ந் திருக்காவிடில் அதற் குத் தமிழின் தலையெழுத்தைக் குறை கூற வேண்டுமே யன்றி, கூட்டத்தினர் மீது கொஞ்சமாவது குறை சொல்வ தற்கில்லை. ஏனெனில் மகாநாட்டில் விஷயங்களை வெகு மும்முரமாக அலசி, மிக்க வீரத்தோடும் காரத்தோடும் பேசித் தீர்த்து விட்டார்கள்.

அவ்வப்போது மேடைமீது உதித் துக் கொண்டிருந்த பிரசங்கிகளைக் காண்பதைவிட அதிகமாக, சபையி லமர்ந்திருந்த பெரியார்களை ஒவ்வொரு வராகக் காண்பது மிக்க இன்பம் தரு வதாயிருந்தது. பழங்காலத்துப் பண் டித மணிகள், புதுக்காலத்துச் சீர்திருத் தக்காரர்கள், பழுத்த தேச பக்தர்கள், அரசாங்கத்தின் செல்லப் பிள்ளைகள், நீண்ட நீண்ட பட்டதாரிகள், பல சம யத்தைச் சேர்ந்தவர்கள் இப்படிப் பல திறப்பட்ட பெரியார்கள் ஒரே மகா நாட்டில் ஒருங்கே காணக் கிடைப்பது அருமை! அப்படிச் சேர்ந்திருந்த காலத்து இவ்வளவு சமாதானமாக முடிவுகள் ஏற்படுவது அருமையினும் அருமை. ஆகவே மகாநாடு தன் கட மையைச் செவ்வனே செய்துவிட்டது. இனி, தமிழின் 'தலை யெழுத்தை'த் தான் கவனிக்கவேண்டும்.

வரவேற்பு சபைத் தலைவர் டாக்டர் சுவாமிநாதய்யரின் பேருரை, மகா நாட்டைத் திறந்து வைத்த ஸ்ரீ அண்ணா மலைச் செட்டியார் சொற்பொழிவு, திரு. குமாரசாமி ரெட்டியார் பிரசங்கம் எல்லாவற்றிலும் நடைமுறையில் உயிரோடு உலவும் தமிழ் மொழிக்கே பேராதரவு தரப்பட்டது. அதற்கேற்ப மகா நாட்டின் பிரசங்கம் ஒவ்வொன்றி லும் தமிழ் உயிரோடு குதித்துக் கொண்டேயிருந்தது கவனிக்கத் தக் கது. ஆத்திரப் பிரசங்கமாக இருப்பி னும் அதிகப் பிரசங்கமின்றி அன்பர் கள் போட்டி போட்டுக் கொண்டு பேசினர். இனி முத்தமிழோடு 'பிரசங் கத்தமிழ்' என்ற ஓர் நாலாவது சிறப்பை யும் தமிழ் மொழியில் சேர்ப்பதற்கு இம் மகாநாடு முயன்றிருக்கிறாப் போல் தோன்றுகிறது.

இந்த மகாநாட்டுக்கு மகாத்மா காந்தியடிகளும் ஓர் ஆசிச் செய்தி யனுப்பியது ஓர் விசேஷம். செய்தியின் கீழ் தமிழில் கையெழுத்திட்டு மகான் அனுப்பியது அதைவிட விசேஷம். செய்தியில் கண்டிருந்த கருத்தோ மிக வும் முக்கியம்.

"தமிழர்களின் தமிழ் அன்பு நீடித் திருக்க வேண்டுமென்றும், எவ்வித இடையூறுகளையும் எதிர்த்து நிற்கத் தேவையான சக்தி அவர்களுக்கு இரு க்குமென்றும் நம்புகின்றேன். எனது தமிழறிவு சொற்பமே. ஆயினும் அந்த அறிவிலும் தமிழின் அழகும் வளமும் தென்படுகின்றன. தமிழை அலட்சியம் செய்வது ஓர் பெருங் குற்றம் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

இப்படிக்கு,

மோகன்தாஸ் காந்தி

M.K.Gandhi

மகாத்மாஜி அனுப்பிய செய்தியில் கண்டிருந்தபடி இடையூறுகளை எதிர் த்து நிற்கத் தேவையான சக்தி தமிழர் களுக்கு உண்டா இல்லையா வென்ப தற்கு மகாநாட்டின் ஆரம்பத்திலேயே ஓர் சோதனை ஏற்பட்டு விட்டது. ஸ்ரீ குமாரசாமி ரெட்டியாரைத் தலைவ ராகப் பிரரேபிக்கும்போது எதிர்ப்பு கள் தோன்றின. ஆனால் தமிழர்களா விட்டுக் கொடுப்பவர்கள்? எதிர்ப்பும் ஆமோதிப்பும் நாடகம் போலத் தோன்றி மறைந்தன. ஏக மனதாக, சபையோர் அவரையே அக்ர ஆஸனத் தில் உட்கார வைத்து விட்டனர். அவ ரும் அந்த நிமிஷம் முதல் வெகு 'தைர் யத்'தோடும், 'நிதான'த்தோடும் நட வடிக்கைகளை நடத்தி வந்தார்.

தமிழ்ச் சுவையில் மயங்கி யாராவது தூங்கிவிடப் போகிறார்களே என்று அடிக்கடி கரகோஷங்களும், மேல் ஸ்தாயிப் பேச்சுகளும் தொடர்ச்சியாக இருந்தது பாராட்டத்தக்க விஷயம். தமிழர்களுக்கு ரோஷ முண்டாக்கு வதற்காக அவ்வப்போது எதிர்ப்புக் குரல்களும் கேட்டுக்கொண் டிருந்தன. அவ்வளவுக்கும் ஈடு கொடுக்கும் சக்தி யுள்ள 'கருவி'யாக குமாரசாமி ரெட்டி யார் இருந்துவந்தார்.

நடுவில் ஒரு விஷயம் அநேகர் மன தைக் கலக்கிவிட்டது. அது என்ன தெரியுமா? "பகுத்தறிவுக்கு முர ணான தெய்வ வணக்கம் போன்ற பாடல்களைப் பள்ளிச் சிறுவர்களுக்குச் சொல்லித் தரலாகாது" என்று ஒரு தீர்மானம் மேடைமீது தாண்டவ மாடியது. "ஆஹா! தெய்வத்தின் மீது கைபோட்டு விட்டார் களே தெய்வத்துக்கு ஆபத்து வந்து விட்டதே!" என்று சில பக்தர்கள் கலங்கினர். தமிழ் அன்பர் மகாநாடு, தெய்வ பக்தி மகாநாடாகவோ அல்லது தெய்வ நிக்ரக மகாநாடாகவோ மாறி விடப் போகிறதேயென்று தோன் றிற்று. ஆனால் அன்று தெய்வம் யார் கையிலும் அகப்பட்டுக் கொள்ள வில்லை. ஒரு மகமதியப் பிரதிநிதி யின் ஆட்சேபனை காரணமாக, கடவுள் அந்தத் தீர்மானத்தை யும் எடுத்துக் கொண்டு மறைந்து விட்டார். அதா வது அந்தத் தீர்மானத்தைத் தலைவர் நிராகரித்து விட்டார். ஆனால் இரண்டு கட்சியாரும் அந்தச் சமயத்தில் தலைவரைப் புகழ்ந்ததுதான் விவரிக்க 'முடி யாத விகடக் காட்சி. 'நம் கட்சி தோல்வி யடையவில்லையே!' என்பது இருகட்சியாரின் எண்ணமும்!

மகா நாட்டில் நிறைவேறிய தீர் மானங்களை விட வெகு சுவையாக இருந்தது ஸ்ரீ முத்தையா பாகவதர் தமிழ்ச் சங்கீதக் கச்சேரி. எல்லாவற்றை யும் காட்டிலும் ஓர் சிறு கோஷ்டியினர் சிற்றுண்டிக் கச்சேரியில் அதை விட அதிகச் சுவை கண்டு கொண்டிருந்த னர். இவ்வளவு ஏற்பாடுகளையும் செய்து தந்த புத்தகாலயப் பிரசாரசங்கத்திற்கு தமிழ்நாட்டின் நன்றி யுரித்தாகுக.

சாணத்தின் உபயோகம்

இவ்வளவு நான் கழித்து மேனாட்டு வைத்தியர்கள் பசுஞ் சாணத்தின் சக்தியை ஒப்புக்கொண்டு விட்டார்கள். சுகாதார டைரக்டரான டாக்டர் ஜெ. ஆர். டி. வெப், கள்ளிக்கோட்டையில் நடந்த ஓர் வைத்தியர் கூட்டத்தில் பின்வருமாறு கூறியிருக்கிறார் :—

"நான் 1931-ஆம் இங்கிலாந்துக்குப் போய்க்கொண்டிருந்தபோது டாக்டர் அஷ்ஷ்ராப் என்பவரைக் கப்பலில் சந்தித்தேன். அவர் பசுஞ் சாணத்தின் உபயோகங்களைப்பற்றிச் செய்திருந்த ஆராய்ச்சிகளைப்பற்றி என்னோடு பேசினார். புண், வீக்கம் முதலியவைகளுக்குச் சாணத்தை வைத்துக் கட்டிச் சொஸ்தமாக்கும் முறைஇந்தியாவின் கிராமங்களிலிருந்து வருவதாகவும், ஆகவே அதைப் பரிசீலனை செய்ய, தாம் முற்பட்டதாகவும் கூறினார். பசுஞ்சாணத்தில் அநேகவிதமான நுண்ணுயிர்கள் இருக்கின்றன. தொத்து நோயைத் தடுக்கும் சக்தி அந்நுண்ணுயிர்களுக்கு இருக்கின்றன. பிரான்ஸுக்குப் போன பின்பு டாக்டர் அஷ்ராபும் டாக்டர் பரீக்ஷையில் தேறியுள்ள அவரது மனைவியாரும் பசுஞ்சாணத்தை ஆராய்ச்சிசெய்து நுண்ணுயிர்களைக் கண்டு பிடித்து எ. பி. ஸி. என்று அவைகளுக்குப் பெயரும் தந்தார்கள்.

"ஆகவே நான் இங்கிலாந்தினின்று திரும்பி வந்ததும் கிண்டி கிங் இன்ஸ்டிடியூட் ஆராய்ச்சிச் சாலையின் அத்தியட்சகரோடு கலந்து பேசி மேற்படி நுண்ணியிர்களை எப்படி உபயோகிப்பதென்று முடிவுக்கு வந்தோம்.

* *

"சில நுண்ணுயிர்களை எடுத்து, சீசாக்களில் அடைத்து, குடி தண்ணீரெடுக்கப்படும் கிணறுகளில் உபயோகிப்பதென்று தீர்மானித்தோம். கோதாவரி புஷ்கரம் உத்ஸவம் நடந்தபோது அவ்வூருக்கு அருகே பத்ராசலம் என்ற ஊரில் காலராத் தொல்லை இருந்து வந்தது. ஆகவே சில நுண்ணுயிர்களைக் கோதாவரியின் எல்லாக் கிணறுகளிலும் குடி தண்ணீர்ப் பீப்பாய்களிலும் வைத்திய அதிகாரிகள் போட்டு வைத்தார்கள். அந்த உத்ஸவத்தின்போது காலரா பரவாதது கண்டு, வைத்திய இலாகாக்காரர் ஆச்சர்ய மடைந்தனர்.

"இந்த நுண்ணுயிர்களின் சக்தியைப்பற்றி சிறந்த டாக்டர்கள் பலமான வாக்குவாதங்கள் செய்தனர். கிண்டி இன்ஸ்டிடியூட்டைச் சேர்ந்த டாக்டர் பண்டிட் வடக்கே பாட்னாவுக்குக்கூட இந்த ஆராய்ச்சி சம்பந்தமாகச் சென்று திரும்பினார். பிறகு கும்பகோணம் திருவிழாவிலும், வட ஆற்காடு ஜில்லாவில் ஓர் இடத்திலும் இந்த நுண்ணுயிர்களைக் குடி தண்ணீரில் பிரயோகித்து ஆராய்ச்சி செய்தோம். இந்த நுண்ணுயிர் கலந்த தண்ணீரைப் பருகிய எவருக்கும் காலரா தொத்து நோய் காணவில்லை என்பது தெரிந்தது. ஆகவே சென்னைத் தொத்து நோய் ஆஸ்பத்திரியிலும் இந்த நுண்ணுயிர்களைக் கையாளுவதென்று தீர்மானித்துளோம்."

—

பிரபுக்களுக்குச் சீட்டு

இங்கிலாந்தில் பார்லிமெண்டு இரண்டு பிரிவுடையது. 'லார்டு சபை' 'காமன்ஸ் சபை' என்பன அவைகளின் பெயர்கள். லார்டு சபை யென்ற பிரபுக்கள் சபையில் 700 அங்கத்தினர்களுண்டு. ஆனால் இந்தப் பிரபுக்கள் அத்தனை பேரும் சேர்ந்து ஒரு நாளாவது குந்தினது கிடையாது; ஆகவே லார்டு சபையைச் 'சோம்பேறிச் சபை' யென்று அழைப்பது ஆங்கில வழக்கு மொழியாகி விட்டது. ஆகவே இனிப் பிரபு சபையில் 320 பேரே போதுமென்று ஓர் மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மசோதாவுக்கு முதல் அரங்கேற்றுபடியும் ஆகிவிட்டது. மசோதாச் சட்டமானவுடன் சில பிரபுக்களுக்குச் சீட்டுக் கொடுத்து விடுவார்களாம். 300 பேரோ 700 பேரோ எண்ணிக்கை எவ்வளவாயினும்——பிரபுக்கள் சபையென்று ஓர் 'சோம்பேறிச் சபை' இருப்பானேன் என்பது தான் நமது கட்சி.

பிரபல ஜோதிடம்

இராஜாக்களாலும் பிரபுக்களாலும் நன்கு மதிக்கப்பெற்றவர். ஒரு முறை பரீக்ஷியுங்கள். ஒரு வருஷ வாரப் பலன் எழுத ரூ. 7. மாத பலனுக்கு ரூ. 2 ஆரூடம் 5-கேள்விக்கு ரூ. 1. விவாக விஷயம் ரூ.1. ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரமாவது தேவை.

புதுச்சேரி, வி. தியாகராஜ பிள்ளை.
215, தங்கசாலை வீதி, சென்னை.

பிரகரண மகாநாடு

—ஓர் தலைப்பு.

ஆயுதப் பரிகரண மகாநாட்டு விஷயத்தை எழுத முன்வந்த பத்திரிகை பிரகரண மகாநாடு என்று எழுதிவிட்டது. 'பிரகரணம்' என்ற வடமொழிச் சொல்லுக்கு அடி, உதை ஆயுதம் என்பன அர்த்தங்களாகும். பரிகரண மகாநாடு குலைந்துபோய் விட்டது. இனி அது பிரகரண மகாநாடாகயாறப்போகிறது போலும்.

* * *

குழந்தை ஆணானலென்ன? பெண்ணானலென்ன?

—செய்தித் தலைப்பு.

நமது கையில் வந்து சிக்கிக் கொண்ட பிறகு சும்மா விடப் போகிறோமோ என்கிறீர்களாக்கும்.

* * *

நமது பத்திரிகை விற்காத ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை.

—ஓர் விளம்பரம்.

அது விற்காத ஊர்களில் ஏஜென்ஸி எடுத்துக் கொண்டு கஷ்டப் படுவதா? ஓஹோ! அவ்வூர்களின் ஏஜெண்டுகள் பத்திரிகையை எப்படியாவது விற்பனையாகுமாறு பெரு முயற்சி எடுக்க வேண்டும் என்பது கருத்தோ!

* * *

"நான் போகலாமென்று வாய் திறந்தால் வார்த்தைகள் வெளிவராமல் உள்ளேயே சென்று விடுகிறது."

—கதை.

ஆகவே வார்த்தைகளுக்கும் மைசூர் பாகுக்கும் வித்யாசமில்லை யல்லவா?

* * *

பலவித கண்ணாடி புட்டிகள், கார்க்குகள், எஸ்ஸன்ஸுகள், வைத்தியர், டாக்டர், வியாபாரி முதலான யாவருக்கும்.........

—விளம்பரம்.

முதலில் இருக்கும் மூன்று இனங்களையும் இனிமேல் "சகோதரரே! சகோதரிகளே" என்றுதான் அழைக்க வேண்டும் போலிருக்கிறது.

ஆசை

(தானப்பன் எழுதியது)

'ஆசையைத்தொலே; அப்பொழுது தான் உனக்குச் சித்த உறுதி உண்டாகும்' என்று சொல்லிப்போட்டு ஒருவர் பின் ஒருவராக ஆசையிலேயே பிறந்து, வளர்ந்து, இறந்து விட்டனர். அதனுல்தான் "ஆசைக்கோர் அளவில்லே" என்றுர்போலிருக்கிறது அந்த சித்தரில் பெரிய பித்தர், தாயுமானவர். ஆசையைப்பற்றி எழுதவும் ஒரு அளவு இல்லே. ஆசையினுல்தான் உலகம் அழிவுறுகின்றது. ஆசையினுல்தான் உலகம் முன்னுக்கு வருகின்றது. பரமாத்மாமுதல் பாபாத்மா ஈருக ஆசையில் விழுந்து உழலுகின்றனர். ஈசனுக்கும் ஆசை உண்டு. இல்லாவிடில் உலகில்உள்ள ஜனங்களே அவன் எப்படிக் காப்பாற்ற முடியும்? ஒரு நண்பரைச் சோதிக்க எண்ணி, "துறவிக்கு ஆசை உண்டா?" என்றேன். அவர் "இல்லே," என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னுர். "என் ஐயா, துறவிக்குத் துறவறத்தில் ஆசையில்லாமல் எப்படித்துறவியாக வாழமுடியும்?" என்றேன். "உண்மை! உண்மை!" என்று கூவத் தொடங்கினுர்.

"தானுகச் சாகப்போகிறவன் உலகை வெறுத்துப்போகிறுன். ஆகையால் அவனுக்கு ஆசை இல்லே" என்றுன் ஒரு தர்க்க சிரோன்மணி. "தம்பி! சாகப்போகிறவன் உலகை வெறுக்கிறுன். அவன்தன் கஷ்டநிலேயைப் பார்த்து அதைவிடச் சாவு நல்லது என்று எண்ணுகிறுன். ஆகையால் அவனுக்குச் சாவதில் ஆசைதானே? புரிந்ததா?" என்றேன்.

சிரோன்மணி ஒன்றும் பதில் பேசவில்லே. அவனே வம்புக்கு இழுக்க நமக்கு ஆசை. அவனுக்கோ என்மாதிரி பேர்வழியே யில்லாமல் உலகில் வாழ வேண்டுமென்று ஆசை. ஆசையில் மூன்று விதம் (1) மண்ணுசை (2) பொன்னுசை (3) பெண்ணுசை. இம் மூன்றிற்குள் எல்லாஆசையும் அடங்கி விடுகிறது என்று பெரியோர்கள் சொல்கிறுர்கள். பெரியோர்கள் என்றுல் சித்தர்கள். அவர்கள் இம்மூன்று ஆசை தான் உண்டு என்று சொல்லிப்போட்டு அவைகளினின்றும் விலகினதாகக் காண்பித்து, தாங்கள் தப்பித்துக் கொள்ளலாம்என்ற ஆசைபோலும்.

ஆசை என்பது பொது. அதற்கு எல்லேயில்லே. எல்லோருக்கும் ஆசை உண்டு என்பது வெள்ளிடைமலே. "இந்தியாவுக்குச் சுதந்திரம் வேண்டும். மற்றநாடுகளேப்போல் எனது தாய்நாடு சீரும் சிறப்பும் அடையவேண்டும்" என்கிறுன் ஒரு தேசபக்தன். இது மண்ணுசை. "அன்பர்களே! என் துரைசானிக்குச் செய்த மரியாதையை மெச்சுகிறேன்" என்கிறுர் வில்லிங்டன் துரை. இது பெண்ணுசை. "கடனேக்கொடுப்பது தங்கம், வெள்ளிக் கட்டிகளாகவேண்டும்" என்கிறுர்கள் அமெரிக்கர். அறியாமைக்கூண்டினில் கடித இரையை வைத்துப் பொன்னெலியை இந்தியாவில் பிடித்தாகிறது. இதெல்லாம் பொன்னுசையின் கூற்றுக்கள்.

இன்னும் பலவித ஆசைகள். கேட்டவுடன் ஆசை, கண்டவுடன் ஆசை, தொட்டவுடன் ஆசை, பேச்சில் ஆசை, ஸினிமாவுக்குப்போக ஆசை, போனவுடன் அந்த ஸினிமா நட்சத்திரங்களோடு "ஆடினுல்!" என்றஆசை, கடற்கரைக்குப்போக ஆசை, அங்கு ஒரு காரிகையைத் தனியே காண ஆசை, தட்சணம் அவளேக் காதலுக்குப் பாத்ரமாக்க ஆசை, மோட்டாரில்போக ஆசை, தீனிதின்ன ஆசை, காப்பிகுடிக்கஆசை, சங்கீதத்தில் ஆசை, கண்டதும் ஆசை. முடிவில்லா ஆசை, என்ன ஆச்சரியம்! ஆசை மயம் ஜகத்! ஆகையால் ஆசையில்லாமலிருக்க முடியாது. ஆனுல் ஆசையை நல்லவழியில் செலுத்தி ஒரு கட்டுப்பாடு செய்யலாம். அதற்கு மனவுறுதி வேண்டும் என்பதுதான் முக்கியம்.

இதைப் பத்திரிகையில் பிரசுரிக்க எனக்கு ஆசை, ஆசிரியருக்கு என்ன ஆசை? இதை கிழித்தெறியவா ஆசை?

BOOKS by MAHATMA GANDHI

(in English)

	Rs.	A
Satyagraha in South Africa ...	4	8
Young India Vol. I ...	4	0
Young India Vol. II ...	4	0
A Guide to Health ...	0	12
Neethi Dharma ...	0	8
Indian Home Rule ...	0	8

Swathanthra Sangu Book Depot

8-c, Pycrofts Road,

Triplicane, Madras.

ஆலயப் பிரவேசம்

(மகாத்மா காந்தி.)

நான் செல்லுமிடமெல்லாம் ஒரே கேள்விகளேயே திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருக்கிறுர்கள். இது ஆச்சர்யமாய்த் தானிருக்கிறது. ஆயினும் எதுவரையில் அக்கேள்விகளேக் கேட்டுக் கொண்டிருக்கிறுர்களோ அதுவரையில் நானும் பதில் சொல்லத் தான் வேண்டி யிருக்கிறது. கேள்விகளே எழுதி இடத்தை அடைக்காமல் பதில்களே மாத்திரம் கீழே தருகிறேன்.

(1) ஆலயப் பிரவேச விஷயத்தில் எவ்விதமான பலவந்தமும் கூடாது.

(2) ஒரு கோயிலே ஹரிஜனங்களுக்குத் திறந்துவிட வேண்டுமானுல், பெரும்பாலான தர்மகர்த்தர்கள் சம்மதிக்கவேண்டும்; கோயில் பிரவேசத்தில் நம்பிக்கையும், சம்பந்தப்பட்ட கோயிலில் பிரவேசித்து வணங்கப் பாத்தியமும் உடைய ஜனங்களில் பெரும்பான்மையோருடைய சம்மதமும் வேண்டும். இவர்களுடைய சம்மதம் இல்லாமல் எந்தக் கோயிலும் ஹரிஜனங்களுக்குத் திறந்துவிடப் படாது.

(3) ஆலயப் பிரவேச மசோதாவிலோ தீண்டாமை விலக்கு மசோதாவிலோ பலவந்த மெதுவும் கிடையாது. பிற ஹிந்துக்களின் ஆலயப் பிரவேசத்திற்கு என்ன விதிகள் உண்டோ, அதே விதிகளுக்கு ஹரிஜனங்களேயும் உட்படுத்த வேண்டியது தான்.

(4) இன்று தினம் நடைமுறையிலிருந்து வரும் தீண்டாமைக்குச் சாஸ்திரத்தில் ஆதாரமிருக்கிறது என்று எனக்குத் திருப்தி யேற்படும்படி யாராவது நிரூபிப்பார்களானுல், இந்தக் கிளர்ச்சியை உடனே நிறுத்திவிட நான் தயாராயிருக்கிறேன்.

(5) ஆனுல், தற்காலம் அனுஷ்டிக்கப் பட்டுவரும் தீண்டாமை மனுஷ்ய தர்மத்துக்கே விரோதமான ஓர் கொடுமையாகும். சுயநலமே இக் கொடுமையின் மூலகாரணமாகும். இதுதான் எனது திடமான அபிப்பிராயம்.

(6) ஜனகணிதி உத்தியோகஸ்தர்கள் நினேத்தால் தீண்டா வகுப்பினரைச் சிருஷ்டித்து விடுகிறுர்கள்; அல்லது தீண்டா வகுப்பினரை ஜாதி ஹிந்துக்களாகவும் மாற்றி விடுகிறுர்கள். இவ்விஷயம், "ஹரிஜன்" பத்திரிகையில் வெகு தெளிவாக நிரூபணம் செய்யப்பட்டிருக்கிறது. —"ஹரிஜன்".

காங்கிரஸ் பற்றி காந்திஜி

[சென்னை ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைப் பிரதிநிதிக்கு அளித்த பேட்டியில் மகாத்மாஜி பின்வருமாறு கூறினர்.]

"ராஜீய உலகத்தினின்று நான் விலகி ஹரிஜன சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதால், நான் காங்கிரஸ் விஷயத்தில் நுழைவதற்கில்லை. காங்கிரஸின் தற்போதைய கொள்கைகளைப்பற்றித் தீர்மானிக்க வேண்டியவர் பண்டித ஜவஹர்லால். காங்கிரஸின் மூலாதாரக் கொள்கைகளை ஜவஹர்லால் எப்போதும் விட்டுக் கொடுக்கமாட்டார். பொது உடமைத் தத்துவத்தில் அவர் பற்றுக் கொண்டவரென்பது உண்மையே. அந்தத் தத்துவத்தை இந்தியாவுக்கேற்ற முறையில் எவ்வாறு அமைத்துக் கொள்வதென்பது இன்னும் உருப்பெறவில்லை. ஆகவே அவரது பொதுவுடமைத் தத்துவத்தைக் கண்டு யாரும் பயப்பட வேண்டாம். ஜவஹர்லால் தேசத்தில் குழப்பத்தையும் விளைவிப்பவரன்று. நிற்க,

"நமது தேசத்தின் நிலச் சுவான்தார்களை அடியோடு ஒழித்துவிட முயல்வது சுத்தத் தவருகும். ஆனல் அந்த நிலத்தில பாடுபடும் ஏழைக்கு இன்னும் கொஞ்சம் அதிகமாகப் பலன் கிடைக்க வேண்டுமென்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். சர்க்கார் என்ன செய்தாலும் சரி, தேசத்தில் ஏற்பட்டுள்ள இநத விழிப்பு இனி அடங்காது. ஏனெனில் இது அஹிம்சா தர்மத்தைப் பின்பற்றியதன்றோ."

TEETH TREATED SUPPLIED
7. A.M. TO 12. NOON.

2. P.M. TO 6. P.M.
Dr S. J. MORO.
DENTAL SURGEON.
3/256, CHINA BAZAAR, ROAD.
(OPP. TO FLOWER—BAZAAR POLICE STATION) MADRAS.

மகாத்மா மணிவாசகங்கள் !

[சென்னை சுதேசிக் கண் காட்சியைத் திறந்து வைத்தபோது மகாத்மாஜி பேசிய பேச்சில் ஓர் பகுதி.]

"நான் மதுவிலக்கில் தீவிரப் பித்துமுடையவன். வைத்திருப்பவை யெல்லாம் உயர்ந்த ரகமான சாராயங்களென்று வருணிக்கப் பட்டாலும், அவை வைக்கப்பட்டிருக்கும் காட்சிச் சாலைக்குள் நான் நுழையமாட்டேன். ஏனெனில் மனிதர்களின் மனோபாவத்தையும், தேசத்தின் செல்வத்தையும் சூறையாடுவது மது. அதே மாதிரி சொல்வதற்கில்லை ஆயினும், ஆலைத் துணிகள் வைக்கப் பட்டுள்ள கண் காட்சிச் சாலைகளையும் நான் திறந்து வைப்பதில்லை. மில்லுத் துணியின் அபிவிருத்திக்கு எந்தவிதமான கண் காட்சியும் தேவையில்லை. ஆனல் ஏழையான கதரைப்பற்றிய விஷயமோ வேறு. அதன் அபிவிர்த்திக்காக எவ்வளவு செய்தாலும் செய்ய வேண்டியதே."

[சென்னை ஸ்திரீகளின் கூட்டத்தில் ஏராளமானமான மோதிரங்களும், சங்கிலிகளும் கை வளையல்களும் மகாத்மாஜியின் பாதங்களில் பொன் மழையென வருஷிக்கப்பட்டன. அவர்களிடம் மகாத்மாஜி பின்வருமாறு பேசினர்.]

"நான் நம்புகின்ற அதே கடவுளை நீங்களும் நம்புகின்றீர்கள். ஆனல் கடவுள் மனிதனுக்கு மனிதன் வித்யாசம் பாராட்டும குரூர மனமுடையவரல்ல. ஆனல் நமது ஹிந்து மதத்திலோ இந்தத் தீண்டாமை பெரிய கறையா யிருக்கின்றது. தீண்டாமை இன்னமும் உயிரோடிருக்குமாறு விட்டு விடுமோமானல், ஹிந்து மதம் செத்துவிடும். இதுவரை பகவான் மிக்க பொறுமையோடு இந்த அக்ரமத்தை சகித்துக்கொண்டு வந்திருக்கின்றார். அவரால் எவ்வளவு காலம் தான் பொறுக்க முடியும்! மனிதனை மனிதன் நசுக்கும் இந்த அநியாயத்தை அவரால் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா ?"

[சென்னை மாணவர்களிடையே மகாத்மாஜி செய்த பிரசங்கத்தின் ஓர் பகுதி பின் வருமாறு :]

"கையில் துடைப்பமேந்தி ஹரிஜனச் சேரிகளை மாணவர் சுத்தம் செய்யலாகாதா ? மனித சமூகத்தில் ஒரு சிலரைத் தீண்டத் தகாதவரென்று ஒதுக்கி வைப்பது மத தர்மம் ஆகாது. மதத்திற்கு நேர் விரோதமானது அது. மாணவர்கள் தங்கள் சேவையினல் பொதுஜனங்களின் மனதையே மாற்றி விடவேண்டும். யதாபூர்விகள் சாஸ்திரத்தையும் மறந்துவிட்டனர்; சாதாரண மனிதர்களையும் புறக்கணித்து விட்டனர். பொது ஜனங்கள் விரும்புவது யோக்யதையையே யன்றி வாக் சாதுர்யத்தை யல்ல. ஆகவே மாணவர்களாகிய நீங்கள் சுத்த ஹிருதயத்தோடும், பணிந்த உடலோடும், இந்த அன்புச் செய்தியை ஏந்தி ஹரிஜனச் சேரிகளில் சென்று உழையுங்கள்; பலன் கிட்டும்."

[இரண்டு லட்சம் பேரடங்கிய பிரும்மாண்டமான கடற்கரைக் கூட்டத்தில் மகாத்மா பின்வருமாறு குறிப்பிட்டார்:]

"மிருகத்துக்கு மிருகம் வித்தியாசமென்று கடவுள் எண்ணுகிறரில்லை. அதே மாதிரி மனிதனுக்கு மனிதன் வித்தியாசத்தையும் அவர் கொள்வதில்லை. அப்படி வித்தியாசம் பாராட்டப்பட வேண்டுமாயின் கண்ணுக்குத் தெரியும்படியாக வித்தியாசமான அடையாளங்களை ஏற்படுத்தி யிருப்பார். உலகில் எந்த நாட்டுக்குப் போனலும் இந்தத் 'தீண்டாமை' என்ற தீங்கு காணப்படுவதில்லை. இந்த நாட்டில்தான் தீண்டத் தகாதோர், பார்க்கத் தகாதோர் என்ற அக்ரமப் பிரிவுகள் இருக்கின்றன. இந்த அநியாயத்தை ஒழித்து நமது ஹிருதயத்தில் ஸமத்வ எண்ணங் கொள்வோமானல், ஹரிஜனங்களின் ஹிருதயத்தில் சுதந்திர ஒளி வீசத் தொடங்கும்; நாடு கடைத்தேறும்."

[ஹரிஜனங்கள் வந்து மகாத்மாஜியைப் பேட்டி கண்டபோது அவர் குறிப்பிட்டதாவது.]

"தீண்டாமை என்பது மாண்டு போய்விட்டது. ஆனல் அது ஓர் ராட்சஸன் போன்றதாகையால், இன்னும் மூச்சிருப்பது போலத் தோன்றுகிறது. அப்படியே இருப்பினும் அரக்கனுக்கு இதுதான் கடைசி மூச்சு."

கதரையே கட்டுங்கள்

தமிழில் வெளி வந்து விட்டது!

தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரகம்

(மகாத்மா காந்தி எழுதியது)

முதல் பாகம் (264 பக்கங்கள் கொண்டது) விலை ரூ. 1—0—0

மகாத்மா காந்தி முதன் முதல் சத்தியாக்கிரகத்தை நடத்தி வெற்றி கண்டது தென்னாப்பிரிக்காவில் தான். அதன் சரித்திரத்தை மகாத்மா தாமே எழுதியிருக்கிறார். இதில் பல உருக்கமான நிகழ்ச்சிகளும், உயர்ந்த தத்துவங்களும், தென்னாப்பிரிக்காவைப் பற்றிய பல விவரங்களும், அங்கு இந்தியர் நிலைமைகளும் விஸ்தரிக்கப் பட்டிருக்கின்றன. இந்த முதல் பாகத்தில், ஐரோப்பியரின் பலத்த எதிர்ப்புக்கிடையே மகாத்மாஜீ தென்னாப்பிரிக்காவுக்குள் பிரவேசித்து, பல ஆபத்துக்களுக்கும் ஆள்பட்டு, பெரிய தொரு சத்தியாக்கிரகப் போரை நடத்தி, சர்க்காருடன் முதல் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது வரையிலுள்ள அரிய சரித்திரம் அடங்கியிருக்கிறது.

சுதந்திரச் சங்கு காரியாலயம், 8-C, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu"

A high class popular Tamil weekly.

Price one anna a copy.

Annual subscription:

Inland Rs. 4. **Foreign Rs. 6.**

ADVERTISEMENT TARIFF

	Per Insertion.		
Advertisement rates per Page	Rs. 40	0	0
" Half Page	Rs. 20	0	0
" Quarter Page	Rs. 10	0	0
" per column inch	Rs. 1	8	0

One page is divided into 3 columns of $2\frac{1}{4}'' \times 9''$.

Cover Pages

2nd & 3rd cover page Rs. 50.
4th cover page Rs. 75.

For contracts of 3 months, 6 months and One year a discount of 5, 10 & 15% respectively will be given over these rates.

Office: 8-c, Pycrofts Road,
TRIPLICANE, MADRAS.

"சுதந்திரச் சங்கு"

ஒரு உயர்தரத் தமிழ் வாரப் பத்திரிகை.

தனிப் பிரதி விலை அணா 1.

வருடச் சந்தா:

உள்நாடு ரூ. 4. வெளிநாடு ரூ. 6.

விளம்பர விகிதங்கள்

ஒரு பக்கத்திற்கு தடவை ஒன்றுக்கு	ரூ. 40	0	0
அரைப் பக்கத்திற்கு " "	ரூ. 20	0	0
கால் பக்கத்திற்கு " "	ரூ. 10	0	0
ஒரு பத்தி ஒரு அங்குலத்துக்கு " "	ரூ. 1	8	0

ஒரு பக்கம் $2\frac{1}{4}'' \times 9''$ அளவுக்கு 3-பத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அட்டைப் பக்கங்கள்

2-வது, 3-வது பக்கங்களுக்கு ஒரு தடவைக்கு ரூ. 50.
4-வது பக்கத்துக்கு ஒரு தடவைக்கு ரூ. 75.

3-மாதம், 6-மாதம், ஒரு வருஷம் ஒப்பந்தங்களுக்கு, இந்த விகிதங்களிலிருந்து முறையே நூற்றுக்கு 5, 10, 15 வீதம் 'டிஸ்கவுண்ட்' தள்ளிக் கொடுக்கப்படும்.

மானேஜர்,
"சுதந்திரச் சங்கு",
8-C, பைக்ராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu Press"

Invites enquiries of all classes of
General & Commercial Printing.

Printers of

"Harijan"

Conducted by Mahatma Gandhi

and

Published under the auspices of
The Servants of Untouchables' Society

Subscription for "Harijan"

Inland Rs. 4 Foreign Rs. 5-8.

8-c, PYCROFTS ROAD, TRIPLICANE, MADRAS.

... at the Swathanthara Sangu Press, Triplicane, Madras.